Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கிகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-1295)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 08 (06.09.2003) சனிக்கிழமை இதழ்: 337

# இலங்கையில் சமாதானம் ஏற்பட அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்!

## பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் மைக்கல் அன்கிராம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

'இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு, எமது கட்சியும் பிரிட்டன் அரசும் தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்கும். நாட்டில் சமாதானம் நிலவ அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, மக்களும் பாடுபடவேண்டும். அப்பொழுது தான் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும்.'

- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சியின் பிரதித் தலைவருமான மைக்கல் அன்கிராம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும்போது மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடையும். வேலை வாய்ப்புகள் பெருகும்.

வடஅயர்லாந்தில் நடைபெற்ற சமாதான முயற்சிகளில் பங்குபற்றிய அனுபவத்தைக் கொண்டு நான் சொல்வதாக இருந்தால் இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகள் வெற்றிபெறும் என்றே நம்புகிறேன்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பேச்சாளராக கேணல் சுமேட் பெரேரா

இராணுவப் பேச்சாளராக கேணல் சுமேட் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவப் பேச்சாளராகக் கடமையாற்றிய பிரிகேடியர் சனத் கருணாரத்ன, பதவி உயர்வு பெற்றுச் செல்வதையடுத்து, அவரின் இடத்துக்கு கேணல் சுமிட் பெரேரா இராணுவப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## அமெரிக்க சமாதான செயலணித் தலைவர் இலங்கை விஜயம்!

(கொழும்பு)

அமெரிக்க சமாதான செயலணியின் தலைவர் றொபேட் றீட் அடுத்தவாரம் இலங்கை வருகிறார்.

இலங்கையில் சில தினங்கள் தங்கியிருக்கும் றொபேட் றீட் தலைமையிலான குழு, நாட்டினுடைய தற்போதைய நிலைமை, அரசியல் கட்டமைப்பு தொடர்பாக பல்வேறு தரப்பினருடனும் ஆராயவுள்ளதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு திலக்குடன் சந்திப்பு

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்குக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றுள்ளது.

குரங்குப்பாஞ்சான் முகாம், ஆனந்தக்குளம் விவகாரம் தொடர்பாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குரங்குப்பாஞ்சான் விவகாரம், ஆனந்தக்குள விவகாரம் என்பன

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.மு. - ஜே.வி.பி. கூட்டு ஒத்திவைப்பு!

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கூட்டமைப்பை அமைக்கும் முயற்சியை ஒத்திவைப்பதற்கு இருதரப்பினரும் முடிவு செய்துள்ளனர்.

நேற்று ஜனாதிபதி மாளிகையில் இரு கட்சித் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மேற்படி விடயங்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பொன்னாலைப் பிரதேசத்தில்

# புதிதாகக் கட்டப்பட்ட வீட்டை இடிக்க படையினர் உத்தரவு!

பொன்னாலைப் பகுதியில் புதிதாக கட்டிய வீட்டினை இடிக்குமாறு வீட்டின் உரிமையாளருக்கு படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

புதிதாகக் கட்டப்பட்ட வீடு இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருப்பதே இந்த உத்தரவிற்குக் காரணமென படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்னர், யாழ்.செயலகத்தில் அரச அதிபருக்கும் படைத்தரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பில், இந்தப் பிரதேசம் மக்கள் குடியமர்வதற்காக படைத் தரப்பால் அனுமதிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் இரண்டு லட்சம் ரூபா செலவில் புதிதாகக் கட்டப்பட்ட வீட்டினையே உயர்பாதுகாப்பு வலயப்பகுதி எனக்கூறி படைத்தரப்பு இடிக்க தற்போது உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து ஆணைக்குழு அதிகாரிகள் அப்பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



தமிழினப் படுகொலை ஞாபகார்த்தமாக வந்தாறுமூலை பல்கலையில் அமைக்கப்படும் நினைவுத்தூபிக்கு, போராட்டத்தில் இரண்டு பிள்ளைகளை இழந்த சண்முகம் இராஜநாயகம் அடிக்கல் நாட்டுவதை படத்தில் காணலாம்.

# மீண்டும் யுத்தம் ஆரம்பிக்குமானால் அபிவிருத்திப் பணிகள் செயலிழக்கும்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

(கொழும்பு)


சமாதான நடவடிக்கைகள் சீர்குலைந்து, யுத்தம் ஒன்று ஏற்பட்டால், அபிவிருத்திப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துவிடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதனால், சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் முழு அளவிலான நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று மொனராகலைப் பிரதேசத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட பிரதமர் அங்கு இந்தக் கருத்தை வெளியிட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



இடிக்கிற வேலை இன்னும் முடியேல்ல போல கிடக்குப் பாருங்கோ!

## இராணுவ சேவையிலிருந்து நீக்கும் திட்டம் ஆரம்பம்!

இராணுவத்தில் இருந்து தப்பியோடியோரை சேவையில் இருந்து நீக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக - கம்பஹா மாவட்டத்தில், இராணுவத்திலிருந்து தப்பியோடியோரில் 3485 பேர் அடங்கிய பெயர்ப்பட்டியல், அந்த மாவட்ட பதிவேட்டுப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதில், தப்பியோடியோர் இராணுவத்துக்குச் செலுத்த வேண்டிய தொகையும் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பெயர் பட்டியலிலுள்ளோரில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வேம்படி மகளிர் கல்லூரியில்

# புலிக்கொடி ஏற்றியது தொடர்பாக கண்காணிப்புக்குழு விசாரணை!

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வில், புலிக்கொடி ஏற்றியது சம்பந்தமாக இராணுவத்தினர் செய்த முறைப்பாட்டையடுத்து, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை நடத்தினர்.

'சமுகக்கல்வியும் வரலாறும்' என்ற செயலமர்வு நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது, அங்கு புலிக்கொடி ஏற்றப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# படைத்தரப்பு முதலில் போரை ஆரம்பிக்காது

## என்கிறார் ஒஸ்ரின் பெர்னாண்டோ

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை முடிவுக்கு வந்தால், இலங்கை இராணுவத்தினர் முதலில் போரை ஆரம்பிக்க மாட்டார்கள் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நிறுவனங்களின் செய்தியாளர்கள் முன்னிலையில் உரையாற்றும் போது - ஒஸ்ரின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்கும் விடுதலைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுமுறைகளை குறைப்பதற்கு தொழில் அமைச்சு ஆலோசனை!

(கொழும்பு)

இலங்கையில் விடுமுறை தினங்களைக் குறைப்பதற்கு ஆராய்ந்து வருவதாக, தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையில் அதிக விடுமுறை தினங்கள் நடைமுறையிலிருந்து வருகிறது.

இதன்படி - இலங்கையில் 21 நாள் விடுமுறை தினமாக நடைமுறையில் இருக்கிறது. ஆனால், இந்தியாவில் 14 நாள்கள் விடுமுறை நாளாக இருக்கின்றன. அத்துடன், வளர்முக நாடுகளில் அநேகமாக 10 நாட்களே விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் விடுமுறை நாள் அதிகமாக இருப்பதால், அரச

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1139)

# உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நிக்கோட்)
## நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆஅவ கடன் இல :- 1846 - சிரீ (எஸ்எவ்)

திருகோணமலை மாவட்ட நிருமாண வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் - இல.05

1. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிருமாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும், NECORD திட்டத்தின், திட்டப் பணிப்பாளர் சார்பாகத் திருகோணமலை மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வித்தாரர்களிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| தொ. இல | ஒப்பந்த இனம் காட்டல் இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்பாடாத கட்டணம் (ரூபா) | ஆகக் குறைந்த ICTADபதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | TC/NECORD/ED/16 | திருகோணமலை, மூதூர், அல் - ஃபல்லா வித்தியாலத்தில் 100'X25' பாடசாலைக் கட்டிடத்தின் நிருமாணம். | 1000/= | M8 | 14,000 |
| 02 | TC/NECORD/ED/28 | திருகோணமலை, மூதூர், இறால்குழி கஜமுகா வித்தியாலத்தில் 80'X25' பாடசாலைக் கட்டிடத்தின் நிருமாணம். | 1000/= | M8 | 11,000 |
| 03 | TC/NECORD/HS/07 | திருகோணமலை, மூதூர், கட்டைபறிச்சானில் கிராமோதய சுகாதார நிலையத்தின் நிருமாணம் | 1000/= | M8 | 14,000 |
| 04 | TC/NECORD/HS/09 | திருகோணமலை, மூதூர், இத்திக்குளத்தில் கிராமோதய சுகாதார நிலையத்தின் நிருமாணம். | 1000/= | M8 | 14,000 |
| 05 | TC/NECORD/HS/13 | திருகோணமலை, மூதூர், தோப்பூர் பிரதேச வைத்தியசாலையின் மீள் புனரமைப்பு | 1000/= | M7 | 30,000 |
| 06 | TC/NECORD/HS/14 | திருகோணமலை, மூதூர் இறால்குழியில் கிராமோதய சுகாதார நிலையத்தின் நிருமாணம். | 1000/= | M8 | 14,000 |
| 07 | TC/NECORD/HS/15 | திருகோணமலை, ஈச்சிலம்பற்றை, இலங்கைத்துறை முகத்துவாரத்தில் கிராமோதய சுகாதார் நிலைத்தின் நிருமாணம் | 1000/= | M8 | 14,000 |
| 08 | TC/NECORD/HS/16 | திருகோணமலை, கன்னியாவில் கிராமோதய சுகாதார நிலையத்தின் நிருமாணம். | 1000/= | M8 | 14,000 |
| 09 | TC/NECORD/HS/17 | திருகோணமலை, கந்தளாய், பேராறு கிழக்கு கிராமோதய சுகாதார நிலையத்தின் நிருமாணம். | 1000/= | M8 | 14,000 |
| 10 | TC/NECORD/AG/03 | திருகோணமலை, மூதூர், முன்னம்பொடிவேட்டையில் கமநல கேந்திர நிலையத் தொகுதி, பொதுக்களஞ்சியம் மற்றும் சுற்றுலா விடுதி உள்ளடங்கலாக புனர் நிருமாணம். | 1000/= | M7 | 27,000 |
| 11 | TC/NECORD/AG/04 | திருகோணமலை, மூதூர், கிளிவெட்டியில் கமநல கேந்திர நிலையத் தொகுதி, பொதுக்களஞ்சியம் மற்றும் சுற்றுலா விடுதி உள்ளடங்களாக புனர் நிருமாணம். | 1000/= | M7 | 24,000 |
| 12 | TC/NECORD/AG/07 | திருகோணமலை, கோமரங்கடவெலயில் விவசாய போதனாசிரியர் விடுதியின் திருத்த வேலை. | 1000/= | M9 | 8000 |
| 13 | TC/NECORD/AG/08 | திருகோணமலை, மொறவேவ தெற்கு, பன்குளம் கமநல கேந்திர நிலையத் தொகுதி, உரக்களஞ்சியம் களஞ்சியம், வங்கி, மற்றும் வாகனத்தரிப்பிடம் உள்ளடங்களாக புனர் நிருமாணம் | 1000/= | M7 | 34,000 |
| 14 | TC/NECORD/RD/01 | திருகோணமலை, மூதூர், கொல்லன்னார் வீதியில் அமைந்துள்ள கொல்லன்னார் பாலத்தை மீளப்புனரமைத்தல் | 1000/= | M7 | 48,000 |
| 15 | TC/NECORD/RD/04 | திருகோணமலை, மூதூர், சம்பூர் இளக்கந்தை வீதி மேம்படுத்தல் | 1000/= | M6 | 60,000 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்விகள் கோருவதற்கு தகுதியுடையவர்கள்.
   - I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (இக்டாட்டுடன் M7 இற்கு மேலாக பதிவு செய்யதவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.
   - III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமான முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான செயற்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்று பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.
   - IV. "இக்டாட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   - V. ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   - VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

4. இதன் தொடர்பாக பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கூறுவிலையிட முடியும். ஒவ்வொரு ஒப்பந்தவ்டயமும் புறம்பானதொரு கூறுவிலையாக அமைய வேண்டும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தகளின் எண்ணிக்கை (NECORD) கருத்திட்டத்தின் கீழ் மூன்றாக விளங்கும். தற்போது கேள்வி முடிவுத்திகதியன்று செயற்படுத்தப்படும் வேலைகளும் இதில் உள்ளடக்கப்படும்.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), கச்சேரி, திருகோணமலை என்ற விசாலத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026 - 2227503, ஃபக்ஸ்: 026 - 2227502 ஈமெயில் necordtc @ sltnet,lk)

6. கேள்வி ஆவணங்களை 2003 செப்ரெம்பர் 8 இலிருந்து 2003 செப்ரெம்பர் 29 வரை காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை வேலை நாட்டிகளில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக பந்தி 2 இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

7. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, "நிக்கோட்", மாவட்ட செயற்திட்ட அலுவலகம், கச்சேரி, திருகோணமலை என்ற விலாசமிட்டு, பதவுத்தபால் மூலம் 2003 ஒக்டோபர் 3 ஆம் திகதி அன்று 10.00 மணிக்கு முன்பதாக அனுப்பப்படவேண்டும். அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

8. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று இதன் தொடபாக பந்தி 5 இல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் 2003 செப்ரெம்பர் 25 திகதி அன்று மாலை 3.00 இற்கு நடைபெறும்.

9. இருபொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இதன் தொடர்பான பந்தி 7 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படிவேண்டும்.

10. சகல கேள்விகளும் இதன்தொடர்பாக பந்தி 2 இல் உள்ள அட்டவணையின் பிரகாரம் கேள்விப் பிணைப்பணத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

11. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

12. மாற்றீடான கூறுவிலைகள் கருத்திற்கு எடுக்கப்படமாட்டாது.

எம்.டி.ஏ.ஜி. றொட்றிகோ,
அரச அதிபர்/தலைவர்,
மாவட்ட கேள்விச் சபை,
NECORD கருத்திட்டம்,
திருகோணமலை.

(சி-1455)

## தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினர் - புதிதாகத் தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்றைத் துரித கதியில் அமைத்துவருகின்றனர்.

தற்போது மேற்படி கோபுரத்தின் நிர்மாணப்பணிகள் ஐம்பது வீதத்திற்குமேல் முடிவடைந்துள்ளதுடன், தொடர்ந்தும் வேலை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பேராளர் சங்கம நிகழ்வு

(சுதுமலை)

தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர்கள் பங்கு பற்றும் 'சங்கம நிகழ்வு' எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அரச, அரசசார் பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகம் நியாயமானதொரு கோரிக்கையாகும்!

### கொழும்பு பல்கலை சட்டத்துறைத் தலைவர் கலாநிதி தீபிகா உடகம

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் கோரியுள்ள வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக அலகு - அவசியமானதும், நியாயமானதுமான ஒன்று என, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவராகவுள்ள கலாநிதி தீபிகா உடகம தெரிவித்தார்.

மனித உரிமைகள் குறித்த விடயத்தில், வடக்கு - கிழக்கு முன்னிலைப்படுத்தப்படுவதுடன்,

நீண்டகாலப் போரில் பாதிப்படைந்த மக்களின் நலன்களைக் கருத்திற்கொள்ளாமல், எந்தவொரு நாட்டிலும் இனப்பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.

இலங்கைப் பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வு எட்டப்படும்வரை- இடைக்கால நிர்வாகத் திட்டம் அவசியமானது என்பதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை.

நீண்டகாலம் தீர்க்கப்படாமல் கடும் போரில் திண்டாடி, தற்போது தீர்வுகிடைத்துள்ள தென்னாபிரிக்க இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சியில், 1993 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டுவரை - இடைக்காலத் தீர்வுப் பொதியை அவர்களும் தயாரித்துப் பயன்படுத்தியுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் இடைக்கால நிர்வாக அலகு ஒன்றை உருவாக்கியதுடன், இடைக்கால நிர்வாகச் சட்டமூலத்தையும் உருவாக்கி- கறுப்பினத் தலைமையிடம் வழங்கிய பின்னரே, இறுதித் தீர்வு பற்றிப் பேசப்பட்டதென்றும்,

அத்தகைய முறையை இலங்கை அரசும் கடைப்பிடிப்பது அவசியமானது, என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விவசாய சம்மேளனத்திற்கு நிர்வாகிகள் தெரிவு

(அரியாலை)

விவசாய சம்மேளனத்திற்குப் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

புதிய நிர்வாகசபையில் - தலைவராக எஸ்.ரி.பத்மநாதனும், செயலாளராக எஸ்.சோமலிங்கமும், பொருளாளராக பி.பஞ்சலிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வயலம் என்ற போர்வையில், இராணுவத்தினர் அரியாலைப் பகுதி விவசாய நிலங்களில் நிலைகொண்டிருந்ததால் - கடந்த ஏழு வருடங்களாக அரியாலை விவசாய சம்மேளனம் இயங்கமுடியாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது அரியாலையின் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்த இடங்களில் - விவசாயம் செய்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியதையடுத்தே, விவசாய சம்மேளனத்திற்குப் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### மத்திய மாகாணசபை சுகாதார ஊழியர்கள்

# தங்கள் பிரச்சினைகள் தொடர்பாக மாகாணசபையில் முறையிடலாம்!

மத்திய மாகாண சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் ஊழியர்கள் - தங்கள் பிரச்சினை தொடர்பாக மாகாண சபையிடம் முறைப்பாட்டை செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் ஊழியர்கள், தமது பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாக மத்திய அரசிடம் முறைப்பாட்டைச் செய்கின்றார்கள்.

மத்திய அரசிடம் தமது பிரச்சினைகளைக் கூறியபின்னரே, மாகாண சபையிடம் வருகின்றார்கள்.

இவ்வாறான செயற்பாடுகள் மாகாணசபை நிர்வாகத்தை அவமதிக்கும் செயல்களாகக் கருதப்படுகின்றன.

மாகாண சபையில் முடிவுகள் எடுக்கக்கூடிய சாதாரண பிரச்சினைகள்கூட, மத்திய அரசுக்கு நேரடியாகச் செல்கின்றன.

இனிவரும் காலங்களில் இவ்வாறான நடைமுறைகளைத் தவிர்த்து, தங்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக மாகாணசபையிடம் முறைப்பாட்டைச் செய்யலாம் என, மத்திய மாகாண சுகாதார அமைச்சர் சாலியப் பண்டார திசாநாயக்க - தெரிவித்தார் (01)

# இரு மாகாணசபை உறுப்பினர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுப்பு!

ஐக்கிய தேசியக் கட்சியின் சப்பிரகமுவ மாகாணசபை உறுப்பினர்கள் இருவருக்கு- கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சம்பிரகமுவ மாகாணத்தில் கடந்தகாலத்தில் வர்த்தகர்கள் பலருக்குக் கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதோடு, பாதுகாப்பு அதிகாரிகள் பலர் தாக்கப்பட்டிருந்தனர். அது தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும், அவற்றைப் பொலிஸார் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள்- நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதும், கொலை அச்சுறுத்தல் விடுவதும் தற்போது அதிகரித்துச் செல்வதாகக் கூறப்படுகின்றது. (01)

# மல்வத்தை விகாரையருகே கிரனேட்டுக்கள் கண்டுபிடிப்பு!

(கொழும்பு)

கண்டி மல்வத்தை விகாரைப்பகுதியில் - இரண்டு கிரனேட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இரண்டு ஜே.ஆர்.ரக குண்டுகளே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், அரசாங்க அதிகாரிகள் வசிக்கும் இந்தப் பிரதேசத்தில் - இந்தக் குண்டுகள் எப்படிக் கொண்டு வரப்பட்டன என்பது குறித்து, பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே, இந்தக் குண்டுகளை மீட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரிக்கற் இல்லாமல் ரயிலில் பயணம் செய்யும் பயணிகளுக்கான தண்டப்பணம் அதிகரிப்பு!

(கொழும்பு)

ரிக்கற் இன்றிப் பயணம் செய்யும் ரயில் பயணிகள் மீது அறவிடப்படும் தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ரயிலில் பயணம் செய்யும்போது, ரிக்கற் எடுக்காமல் பயணம் செய்பவர்களின் தொகை அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த வருடத்தில் மட்டும் - 22 ஆயிரம்பேர் ரிக்கற் இன்றி ரயிலில் பயணம் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆறு மாதங்களில் மட்டும் - 11 ஆயிரத்து 500 பேர் ரிக்கற் இன்றிப் பயணம் செய்திருக்கிறார்கள்.

நேற்றுமுன்தினம் ரயில்வே அதிகாரசபை - ரிக்கற் இன்றிப் பயணம் செய்வோர்மீது அறவிடப்படும் புதிய தண்டப்பணம் பற்றிய விபரங்களை வெளியிட்டுள்ளது

மூன்றாம் வகுப்பில் ரிக்கற் இன்றிப் பயணம் செய்பவர்களுக்கு - இதுவரை காலமும் இருநூறு ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுவந்தது. இனிமேல் இத்தொகை ஐந்நூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வகுப்பில் ரிக்கற் இன்றிப் பயணம் செய்பவர்களிடம்- இதுவரை தண்டப்பணமாக முந்நூறு ரூபா அறவிடப்பட்டது. இனிமேல் இத்தொகை எழுநூற்று ஐம்பது ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முதலாம் வகுப்பில் ரிக்கற் இன்றிப் பயணம் செய்யும் ஒருவரிடம்- இதுவரை ஐந்நூறு ரூபாவே தண்டப் பணமாக அறவிடப்பட்டு வந்தது. இனிமேல் ஆயிரம் ரூபாவைத் தண்டப் பணமாகச் செலுத்தவேண்டும்.

இந்தத் தீர்மானங்கள் யாவும்- ரயில்வே அதிகாரிகள் சபையின் பணிப்பாளர் சபையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

# ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டு; தீர்மானம் விரைவில் எடுக்கப்படும்!

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி ஆகிய கட்சிகளிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையில், இறுதித் தீர்மானம் எடுக்கப்படலாம் என நம்பப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி ஆகிய இரு கட்சிகளும் கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் அதிகாரப் பகிர்வு, சமஷ்டி தொடர்பான விடயங்களில், ஒரு இணக்கப்பாட்டுக்கு இரு கட்சிகளும் வரமுடியாமல் இருந்தனர்.

இவை தொடர்பாக சுதந்திரக் கட்சி - தனது ஆலோசனைகளை தெரிவித்து அறிக்கை ஒன்றினை தங்களிடம் சமர்ப்பிக்கவேண்டும் என, ஜே.வி.பி கேட்டிருந்தது.

ஜே.வி.பி கேட்டுக்கொண்டதற்கு அமைவாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது ஆலோசனைகளைக் குறிப்பிட்டு ஒரு அறிக்கையை ஜே.வி.பிக்கு சமர்ப்பித்திருந்தது.

சுதந்திரக்கட்சியின் இந்த ஆலோசனைகள் தமக்கு திருப்தியளிக்கவில்லை என, ஜே.வி.பியினர் குறிப்பிட்டுள்ளனர்.

ஜே.வி.பியும், சுதந்திரக்கட்சியும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள், இணக்கப்பாட்டுக்குள் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் - நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்த ஜே.வி.பியினர் தீர்மானித்திருந்தனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் ஒரு இணக்கப்பாட்டுக்குள் வரலாம் எனவும், இறுதித் தீர்மானம் ஒன்று எடுக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## அடுத்த பாதயாத்திரை கண்டியிலிருந்து கொழும்புக்கு!

(கொழும்பு)

நாட்டுப் பிரிவினைக்கு எதிராக ஜே.வி.பி தொடர்ச்சியாக நடத்தும் பாதயாத்திரையில், அடுத்ததாக கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி இடம்பெறும் என, ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இந்த யாத்திரை இந்த மாதமே நடத்தப்படும் என்று, கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் இடம்பெறும் கூட்டு ஒப்பந்தம் இந்த மாதத்தில் கைச்சாத்திடப்பட்டால், எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இந்தப் பாதயாத்திரையை நடத்துவோம் எனவும், ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார்.

# நாட்டில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொலிஸார் கூடிய கவனம் எடுக்கவேண்டும்!

### பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா

பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா - நாட்டிலுள்ள பொலிஸ் பிரிவுகள் அனைத்துக்கும் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. அந்தக் குற்றச்செயல்களைத் தடுக்கும் வகையில் - பொலிஸார் கூடிய கவனம் எடுக்கவேண்டும்.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்து, அவர்களுக்குத் தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். பொதுமக்கள் தகவல் கொடுக்கும் வகையில், தொலைபேசி இலக்கங்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச்செயல்கள் தொடர்பாக, பொதுமக்கள் 2855880 அல்லது 2854885 என்ற இலக்கங்களுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தமது முறைப்பாட்டை செய்துகொள்ளமுடியும் என்றும்,

பொதுமக்களின் முறைப்பாடுகளை உடனடியாகக் கவனித்து, அதற்குரிய தீர்வுகளை எடுப்பதற்கு அனைத்து பொலிஸாரும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் எனவும் பொலிஸ் மா அதிபர் கேட்டுள்ளார். (01)

# யாழ். வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு சிறுவர் போசாக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான, சிறுவர் போசாக்குத தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயலமர்வு, இன்றுமுதல் மூன்று தினங்கள், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்தச் செயலமர்வில் - பாடசாலையில் சுகாதாரமும் போசாகக்கும் என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இச்செயலமர்வில் சிறுவர்களின் போஷாக்கு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன.

யாழ்.கோட்டத்திற்கு உட்பட்ட சகல ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களையும் இச்செயலமர்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு, வலயக் கல்விப் பணிப்பாளர் த.விக்கினேஸ்வன் கேட்டுள்ளார்.

இதேவேளை, ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் குடாநாட்டிலுள்ள எல்லா வலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களுக்கும், மேற்படி விடயம் தொடர்பாக கருத்தரங்கை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'பொங்கு தமிழ்' தொடர்பாக மன்னாரில் கலந்துரையாடல்!

(மன்னார்)

மன்னாரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக்கான, கிராமசேவையாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது. மன்னார் மாவட்ட பொங்கு தமிழ் ஏற்பாட்டு மாணவர்களால், இந்தக் கலந்துரையாடல் நேற்றுக்காலை 11 மணிக்கு மன்னார் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் - பெருமளவு பொதுமக்கள் 'பொங்கு தமிழில்' கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுவதால், மன்னார் பொது விளையாட்டரங்கின் இடவசதி போதாத காரணத்தினால் - 'பொங்கு தமிழ்' நிகழ்வினை சாந்திபுரம்வெளி மைதானத்தில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கு கிராமசேவையாளர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என, ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக்கொண்டனர்.

# எங்கள் மீது போரை திணித்ததால் ஆயுதம் ஏந்திப் போராடுகின்றோம்

## தென்மராட்சி பொறுப்பாளர் தமிழ்மாறன்

(தென்மராட்சி)

நாங்கள் போர் வெறியர்கள் அல்லர். கொலைவெறி கொண்டு ஆயுதங்களுடன் நாங்கள் அலையவும் இல்லை. எங்கள் மீது போர் திணிக்கப்பட்டதால், எமது மக்களையும், எமது தாயக பூமியையும் பாதுகாக்கவே நாம் ஆயுதம் ஏந்திப் போராடுகிறோம். இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்மாறன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை, மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் முன்றலில் நடைபெற்ற 'வீரமுரசு' அரங்க நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

சு.க.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

நடந்துமுடிந்த ஆறு கட்டப் சமாதான பேச்சுவார்த்தைகளிலும், தமிழ்மககளின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு கிடைக்கவில்லை. இதனால்தான், தற்போது சமாதான பேச்சுவார்த்தை காலதாமதமாகிறது.

படைத்தரப்பு பல்வேறு சந்தர்ப்பங்களில், எம்மைச் சீண்டி, யுத்தத்திற்கு அழைத்தபோதும், நாம் சண்டையை மீள ஆரம்பிக்கவில்லை.

சமாதானத்தின்பால் எமக்குள்ள அக்கறையினை வெளிப்படுத்துவதிலும், தொடர்ச்சியான போரினால் உருக்குலைந்துள்ள எங்கள் மக்களது வாழ்வை, மேலும் சீரழிய விடக்கூடாது என்பதிலும் நாம் கவனமாக உள்ளோம். எங்களோடு யுத்தகளத்தில் சமராடி, துப்பாக்கிகளால் பேசிக் கொண்ட கொடிய எதிரியோடு, வெறும் சயனைட் குப்பியுடன் மட்டுமே நாம் நின்று அரசியற்பணி புரிகிறோம். இராணுவத்துக்கும் எமக்குமிடையில் முறுகல்நிலை தோன்றுகிறபோதும், மக்கள் மத்தியில் சமாதானம் தடைப்பட்டு, யுத்தம் மீண்டும் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் மேலோங்குவதைக் காணமுடிகிறது. இந்த மக்களது ஏக்கங்கள் எமக்கு புரிகிறது. இதனால்தான், இராணுவம் எவ்வளவு தான் சீண்டினாலும் நாம் போருக்குப் போகாதுள்ளோம்.

காலங்காலமாக எமது தமிழ்த் தலைவர்கள்- சிங்கள அரசுகளால் ஏமாற்றப்பட்டார்கள். ஆனால், நாம் எங்களை யாரும் ஏமாற்றமுடியாது. ஏமாறவும் மாட்டோம். ஏனெனில், இன்று நாம் ஒரு பலமான நிலையிலிருந்தே பேச்சுவார்த்தை மேசைக்குப் போயுள்ளோம். அரசு இன்றும் படைக்கு ஆட்திரட்டுகிறது, ஆயுதங்கள் வாங்குகிறது, பயிற்சிகள் வழங்குகிறது. அதேபோலவே, நாமும் எமது படையணிகளுக்குப் பயிற்சிகளை வழங்குகிறோம், புதியவர்களை இணைக்கிறோம், ஆயுதங்கள் வாங்குகிறோம்.

விடுதலைப் புலிகளது - அதாவது தமிழரது படைப்பலத்தைக் குறைத்து, அவர்கள் விரும்பாத அதிகாரம் குறைந்த ஒரு அரைகுறைத் தீர்வை எங்கள் மீது திணிக்க அரசு முனைகிறது. ஆனால், நாம் பலமாகியுள்ளோம், பலமாகவும் இருப்போம்.

முன்னைய தமிழ்த்தலைவர்களைப்போல, சிங்கள அரசுகளால் ஏமாற்றப்பட்டு நிற்கும்நிலை எமக்கு ஏற்பட நாம் அனுமதிக்கப்போவதில்லை. தமிழ்மக்களுக்குரிய சரியான தீர்வு கிடைக்கும்வரை, 17,000 இற்கும் மேற்பட்ட மாவீரர்களது இலட்சியக் கனவு நனவாகும்வரை- எமது பயணம் தொடரும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து வருகைதந்த சமாதான சுற்றுலாக் கலைஞர்கள் பங்குபற்றிய 'சிங்கமும் புலியும்', இசையும் அசைவும் நிகழ்வும், புதுவையன்பனின் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற நாடகமும் நடைபெற்றன. இந்தநிகழ்வில், பெருந்திரளான பொதுமக்கள் திரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (24)

## சந்நிதி ஆலயத்திற்கான

# போக்குவரத்தை இலகுபடுத்த இளைஞர்கள் நடவடிக்கை

சந்நிதி ஆலயத்திற்கு இந்த ஆண்டு பெருந்திரளான பக்தர்கள் வருவார்களென எதிர்பார்க்கப்படுவதால், வல்லை ஊடான போக்குவரத்துப் பாதையில் பெருநெரிசல் நிலை ஏற்பட வாய்ப்பு இருப்பதால், இடைக்காடு இளைஞர்கள் மேற்படி போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, அச்சுவேலி ஊடான சந்நிதி வீதியால் ஆலயத்திற்குச் செல்லக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

அச்சுவேலி ஊடான சந்நிதி வீதியால் வரும் பக்தர்கள்- தொண்டமான் ஆற்றின் மேற்குப் பகுதியில் தமது வாகனங்களை நிறுத்திவிட்டு, ஆற்றை நடந்துகடக்க கூடியவகையில், மண்மூடைகளால் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. காவடிகள், கனரக வாகனங்கள் தவிர, ஏனையவை இந்த பாதையால் செல்ல முடியுமெனவும், இரண்டு பாதைகளையும் பயன்படுத்தும்போது - நெரிசல்கள, களவுகள் போன்றவற்றை ஓரளவுக்காவது தடுக்கமுடியுமெனவும், இப்பாதையை அமைத்துள்ள இடைகாடு இளைஞர்கள் தெரிவித்துள்ளனர். (128)

# அடாவடித்தனத்தில் ஈடுபட்ட மூன்று இளைஞர்கள் கைது!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்ப்பாணம் கோயில் வீதிப் பகுதியில் இரவு வேளையில், இளைஞர் குழுவொன்று அடாவடித்தனம் புரிந்தது தொடர்பாக, பொலிஸாரினால் மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில்- ஐந்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், சர்வதேச தொண்டு நிறுவனமொன்றில் பணியாற்றும் அதிகாரி ஒருவரும் தாக்குதலுக்குள்ளாகியிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களைக் குறித்த இடத்துக்கு அண்மையிலிருந்த பொலிஸாரின் உதவியுடன் கைதுசெய்து, நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, யாழ்நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டிருந்தார்.

இது தொடர்பாக, கொழும்புத்துறையைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் மேலும் ஐவரின் பெயர்களைச் சம்பவத்தோடு தொடர்புடையவர்களாகக் கூறியுள்ளதாகவும் தெரியவருகிறது. இவர்கள் ஐவரையும் உடனடியாகக் கைதுசெய்து, நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, நீதிவான்- பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை - கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து - சைக்கிள் செயின், பொல்லுகள், தடிகள் போன்ற ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது.

### மன்னாரில் மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு பயிற்சி

(மன்னார்)

மன்னார் நகர பாடசாலை மாணவர்களுக்கு- வீதி ஒழுங்குகள் சம்பந்தமான அறிவுறுத்தல் வகுப்பு நேற்று நடைபெற்றது.

தேசிய வீதிப்பாதுகாப்பு அதிகார சபையினால், மன்னார் நகரசபை மண்டபத்தில் இந்த அறிவுறுத்தல் வகுப்பு நடைபெற்றது.

இந்த வகுப்பில், மன்னார் நகர பாடசாலைகளைச் சேர்ந்த பெருமளவான மாணவர்களும், மன்னார் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர், மன்னார் பொலிஸார் எனப் பலரும் கலந்துகொண்டனர். (201)

## சின்னஞ்சிறு செய்திகள்

### விபத்தில் இளைஞர் காயம்

(அச்சுவேலி)

லொறி ஒன்று மார்பில் ஏறிப் பாய்ந்ததில், இளைஞன் ஒருவர் பலத்த காயமடைந்த சம்பவம் நேற்று மாலை அச்சுவேலி தெற்கில் இடம்பெற்றது.

அச்சுவேலி தெற்கு - நாவற்காடு எனுமிடத்தில், லொறியின் கதவில் நின்று வந்த இளைஞர் - லொறி திடீரென பிறேக் பிடித்தவேளை, தவறி வீழ்ந்ததில், பின்சில்லு - தியாகராசா கணேசபாதம் (வயது 20) என்பவரது மார்பில் ஏறிப்பாய்ந்தது. மேற்படி சம்பவத்தில், காயமடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலை யில் மோலதிக சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

### திரைப்படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித்தொடரில், பாலுமகேந்திராவின் ஒளிப்பதிவில் கே.எஸ்.சேதுமாதவனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'சட்டைக்காரி' என்னும் மலையாளமொழித் திரைப்படம் - தமிழ் உபதலைப்புக்களுடன் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்குக் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொண்டு, பயன்பெறலாம் எனப் புறநிலைப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கிறார்.

### யாழ்ப்பாணத்தில் கஞ்சா விற்பனை

(யாழ்ப்பாணம்)

இரவு வேளைகளில் யாழ்.முனியப்பர் கோயில் வீதிப்பகுதியில், கஞ்சா விற்பனை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் யாழ். முனியப்பர் வீதிப்பகுதியில் - இளைஞர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும், கலாசார சீரழிவுகளும் இங்கு இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இந்த பகுதிகளில விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### மிதிவெடியில் சிக்கிய மாடு காலை இழந்தது

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையவீதியிலுள்ள வளவில் மேய்ச்சலுக்குக் கட்டப்பட்ட மாடு, மிதிவெடியில் சிக்கி தனது காலொன்றை இழந்தது.

இந்தப் பகுதியில் படையினரின் பதுங்குகுழி ஒன்று காணப்படுகிறது. மக்கள் மிகநெருக்கமாக வாழ்ந்து வரும் இநத பகுதியில், மேலும பல மிதிவெடிகள் இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்தப் பகுதியில் கடந்த வருடம் இடம்பெற்ற மிதிவெடி சம்பவம் ஒன்றில், ஒருவர் தனது காலொன்றை இழந்ததும் குறிப்பிடத்தக்கது. (24)

## யாழ். போதனா வைத்தியசாலை

# கழிவு வாய்க்காலிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள கழிவு வாய்க்கால்களில் தொடர்ந்தும் துர்நாற்றம் வீசிவருகிறது.

வைத்தியசாலை கழிவுகளும், இராணுவத்தினரின் முகாமிலிருந்து வெறியேற்றப்படும் கழிவுகளும்- இந்த வாய்க்காலிற்குள் கலப்பதால் துர்நாற்றம் வீசுகிறது.

இந்தக் கழிவுகள் நீண்டகாலமாக அகற்றப்படாமல் இருக்கிறது. ஓரிரு மாதங்களில் மழைகாலம் ஆரம்பமாகவுள்ளதால், கழிவுகள் மூலம் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் உள்ளது.

அண்மையில் இடம்பெற்ற கூட்டமொன்றிலே, நகர சுகாதாரம் பற்றி அரச அதிபரால்- மாநகர ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வல்லைப் பாலத்தில் டிப்பர் விபத்து

வல்லைப் பாலத்தினுள் டிப்பர் ஒன்று தலைகீழாகத் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் டிப்பர் - வல்லைப் பாலத்தைத் தாண்டிக் கொண்டிருந்தவேளை, அதன் அச்சுப் பகுதியில் முறிவு ஏற்பட்டதால், கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் - பாலத்தினுள் பாய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில், எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### சரசாலை முத்துமாரி அம்பாள் கும்பாபிஷேகம்

சாவகச்சேரி - சரசாலை பெரியத் தாய்ப்பதி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய, ஆவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் - எதிர்வரும் திங்கட்கிழமை காலை 5.15 முதல் 5.52 வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 9 மணி முதல் மாலை 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று, கும்பாபிஷேகக் கிரியைகள் யாவும் சிவஸ்ரீ இராம ஸ்ரீதரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (24)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

நான்காவது அகவையில்

பெயர் : உ.கேதீஸ்வரன்
முகவரி : முடமாவடி.



ஐந்தாவது அகவையில்



பெயர் : ர.சானுஜா
முகவரி : 101, பத்திரகாளி வீதி, வண்ணார்பண்ணை.

ஐந்தாவது அகவையில்

பெயர் : ர.சானுஜன்
முகவரி : 101, பத்திரகாளி வீதி, வண்ணார்பண்ணை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------
பெற்றார் ஒப்ப..

## அம்மா எனக்கொரு பாட்டு



அம்மா எனக்கொரு பாட்டுப் பாடு!
அனைவருக்கும் அன்பு செய்ய!
அம்மா எனக்கோர் ஆட்டம் ஆடு!
அறிவு கொண்டுநான் ஆடிக்காட்ட!



அப்பா எனக்கொரு கதையைச் சொல்லு!
அந்தக் கதையை நான் நடித்துக் காட்ட!
அப்பா எனக்கோர் உதவி செய்!
அதுபோல் நானும் உதவி செய்ய!



பாட்டி எனக்கொரு படத்தைக் காட்டு!
படத்தைப் பார்த்து நான் வரைந்து காட்ட!
பாட்டி எனக்கொரு வழியைக் காட்டு!
பலரும் போற்ற வாழ்ந்து காட்ட!



மாமா எனக்கொரு பொம்மை வாங்கிவா!
என்னைப்போல மாற்ற!
மாமா எனக்கொரு சட்டை வாங்கி வா!
பொம்மைக்கு நான் போட்டுப் பார்க்க!

## இப்படியிரு! இப்படியிராதே!!

அன்பாயிரு. அடிமையாகாதே!
அடக்கமாயிரு. அடங்கிப் போகாதே!
கண்டிப்பாயிரு. கஞ்சனாகாதே!
இரக்கங்காட்டு. ஏமாந்துவிடாதே!
ஆசை காட்டு. மோசஞ் செய்யாதே
ஆனந்தமாயிரு. ஆணவமாயிராதே!
சுறுசுறுப்பாயிரு. பதற்றப்படாதே!
பண்பாயிரு. பயமாயிராதே!
பரிவு காட்டு. பாதை மாறாதே!
மதிப்பாயிரு. மயங்கிப்போகாதே!
உலகில் வாழ். உறங்கிப்போகாதோ!



மு. சுகந்தினி

## உங்களுக்குத் தெரியுமா?




கொட் (Cod) என்னும் கடல் மீனிலிருந்துதான், மீன் எண்ணெய் எடுக்கின்றார்கள். அந்த மீன் எண்ணையை (Cod liver oil) பலத்துக்காகப் பலர் சாப்பிடுகிறார்கள். இந்த மீனுக்கு உயர்ச்சத்தெல்லாம் சூரியனிலிருந்துதான் கிடைக்கிறது. ஆனால், இந்த ஆழ்கடல் மீன்-சூரியனைத் தன் வாழ்நாளில் ஒரு தடவைகூடப் பார்த்ததே இல்லை.

## தகவல் களஞ்சியம்

உங்கள் நுண்ணறிவை நீங்களே மதிப்பிடுங்கள்

### சென்றவாரப் புதிர்களுக்கான விடைகள்

1. 12 செக்கன்.
2. 24 m.
3. போட்டியாளர் ஒரு தீக்குச்சியை எடுத்தால் - 2 தீக்குச்சிகளும், 2 தீக்குச்சிகளை எடுத்தால் - ஒருதீக்குச்சியும் பெற, வெற்றி பெறமுடியும். ஏனெனில், கடைசி ஒரு தீக்குச்சியை எடுக்கும் கட்டாயம் அவருக்கு நேரும்.
4. டொக்டராகக் கொழும்பில் இருந்தவர் பெண்.
5. முதலாமவர் - சில்லறையாக இரண்டு ரூபாவையும், இரண்டாமவர் இரண்டு ரூபாதாளையும் கொடுத்தார்.
6. 

7. 16 முக்கோணங்கள்.
8. இரு தடவைகள்.

## இவ்வாரப் புதிர்கள்

முயற்சியுங்கள்! முயற்சியுங்கள்!
முயற்சித்துக் கொண்டேயிருங்கள்.

புதிர் வினாவை மாற்றி,
இன்று ஓர்
புதிய வகை வினா.

இரகசியக் குறியீட்டு மொழியில் எழுதப்பட்டுள்ள நான்கு வாக்கியங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஆனால், இரகசியக் குறியீட்டுமொழியில் - ஆங்கில எழுத்துக்கள் அதே ஒழுங்கில் எழுதப்படவில்லை.

குறிப்பிட்ட இடத்திற்கு நேரத்திற்கு வருக - SNYM.
குறிப்பிட்ட நேரத்திற்குச் சந்தித்துக் கதைப்போம் - TQSM.
வருக நாளை, குறிப்பிட்ட இடத்திற்கு வருக - YYNKM.
நாளை அன்பாகக் கதைப்போம் - QKZ.

**இதற்கு ஏற்ப இரகசியக் குறியீட்டு மொழியின் எழுத்துக்களை இனங்கண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

I. பின்வருவனவற்றிக்கான இரகசியக் குறியீட்டு மொழிகளைத் தருக.
1. நாளை சந்தித்துக் கதைப்போம்.
2. நாளை குறிப்பிட்ட நேரத்திற்குச் சந்தித்துக் கதைப்போம்.

II. பின்வருவனவற்றிற்கான வாக்கியங்களைத் தருக.
1. KZQ.
2. YYSY.


விடைகள் அடுத்த வாரம்.

P. உமாசங்கர், ஆசிரியர் - பொது அறிவு, நுண்ணறிவுத்துறை.

இங்கே மடிக்கவும்



## வீரம் - அறிவு = ?




தொடரும்....



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

## நோர்வே

வாராந்தம் அறிந்துகொள்ளும் நாடுகள் வரிசையில், இந்த வாரம் நோர்வே பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| தலைநகர் | - ஒஸ்லோ. |
| பரப்பளவு | - 3,24,000 சதுர கிலோ மிற்றர். |
| மொழி | - நோர்வேஜியன். |
| சமயம் | - கிறிஸ்தவம். |
| நாணயம் | - குரோனர். |
| முக்கிய நகரங்கள் | - ஒஸ்லோ, பெர்கன், நார்பிக், ஹேமர்பெஸ்ட். |
| சராசரி ஆயுட்காலம் | - 78.3 |
| ஆண் | - 75.4, |
| பெண் | - 81.3 |





இந்த நாடு ஐரோப்பாக் கண்டத்தின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. இதன் வடபகுதி, ஆர்டிக் பகுதியின் மேல் அமைந்துள்ளது. இந்த நாட்டின் எழுபது சதவீதமான பகுதி - மனிதர்கள் வாழமுடியாத மலைகளும், பனி ஆறுகளும் நிறைந்த பகுதியாகும். புகழ்பெற்ற நோபல் பரிசு ஒவ்வொரு வருடமும் ஒஸ்லோவில் இருந்தே வழங்கப்படுகின்றது.

இந்தநாடு மீன்பிடித்தல் மற்றும் கப்பல் கட்டும் தொழிலில் உலகப் புகழ்பெற்று விளங்குகின்றது. வனப் பொருட்கள் மூலமே தனது முக்கிய வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்ற ஒரு நாடாக இது விளங்குகின்றது.

இந்த நாட்டின் முக்கிய உற்பத்திகளாக - விவசாயம் - பார்லி, கால் நடைகள், உருளைக்கிழங்கு, மீன், மரத்தடிகள். அலுமினியம், இரசாயனம், கப்பல், மரக்கூழ் மற்றும் காகிதம், கனிமம் - இல்மனைட், இரும்புத்தாது, காரீயம் என்பன முக்கிய உற்பத்திகளாக இடம்பெறுகின்றன.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-ந.விதுஷன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
பொது அறிவு, சித்திரம் வரைதல், கதைப்புத்தகம் வாசித்தல்.



முழுப்பெயர் :- சே.கமலாசினி
கற்கும் பாடசாலை :-
யாழ்ரன் கல்லூரி
கற்கும் தரம :- 08
ஆர்வமுள்ள துறைகள :-
பத்திரிகை வாசித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர்:- வி.சுஜந்தன்
கற்கும் பாடசாலை :-
யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி
கற்கும் தரம் :- 05
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், கட்டுரை,
விளையாட்டு.

முழுப்பெயர்:- ஸ்ரீ.தருசன்
கற்கும் பாடசாலை :-
யாழ். பரியோவான் கல்லூரி
கற்கும் தரம் :- 04
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, விளையாட்டுத்துறை.

முழுப்பெயர்:- க.பகீரதன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை
கற்கும் தரம் : 04
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல், வீட்டுத்தோட்டம் செய்தல்.

முழுப்பெயர்:- அ.லக்சன்
கற்கும் பாடசாலை :-
கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 06
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு, சித்திரம்.

முழுப்பெயர்:- வே.சர்வேஸ்வரன்
கற்கும் பாடசாலை :-
கரணவாய் மணியகாரன் தோட்டம்
கற்கும் தரம் :- 04
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், சங்கீதம்

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## நகைச்சுவை



ஒருவர் : வாழைப்பழம் ஒரு சீப்பு தாங்கோ?

கடைக்காரன் : வாழைப்பழம் மட்டும்தான் விக்கிறம், சீப்பு விக்கிறதில்லை.

இ.சுதர்நாத், தரம் - 09,
யாழ்.இந்துக்கல்லூரி.

இங்கே மடிக்கவும்



# அரண்டவன் கண்ணுக்கு



காலையில் விறகுவெட்டப் புறப்பட்ட ஒருவன் - தன் வீட்டில் கோடரியைத் தேடினான். எங்கு தேடியும் அது கிடைக்கவில்லை. வீட்டிலுள்ளவர்களும் - தாங்கள் எடுக்கவில்லை என்றார்கள். கடைசியில் கோடரி திருட்டுப் போய்விட்டது என நினைத்த அவன், யார் திருடியிருப்பார்கள் என்று யோசித்தான். பக்கத்து வீட்டுக்காரன் மீது அவனுக்குச் சந்தேகம் வந்தது.

அந்தச் சமயம் பார்த்து அங்கு வந்த பக்கத்து வீட்டுக்காரன் - "என்ன விறகு வெட்டக் காட்டிற்குப் புறப்பட்டுவிட்டீர்களா? எனக்கு உடல் நலம் இல்லை. அதனால், நான் இன்று வரவில்லை" என்றான்.

பக்கத்து வீட்டுக்காரன் எதையோ மறைப்பது போல, அவனுக்குப் பட்டது.

"கோடரியைத் திருடிய அவன் உள்ளம் குறுகுறுக்கிறது. அதனால்தான் - உடல் நலமில்லை, தான் வரவில்லை என்கின்றான்" என்று நினைத்தான் அவன்.


"கோடரியைத் திருடிக்கொண்டு, நல்லவன் போலவா நடிக்கிறாய். உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று மனதுக்குள் கறுவினான். இன்று விறகு வெட்டமுடியாது, சுள்ளியாவது பொறுக்கி வருவோம் என்ற எண்ணத்தில் காட்டுக்குச் சென்றான் அவன்.

போகும் பாதையில் ஓர் இடத்தில் அவன் கோடரி கிடந்தது. முதல் நாள் கோடரியை அங்கே தவறுதலாக மறந்து வைத்துவிட்டு வந்தது அவன் நினைவுக்கு வந்தது. "ஐயோ வீணாகப் பக்கத்து வீட்டுக்காரன் மீது சந்தேகப்பட்டோமே" என்று நினைத்தான் அவன்.

மாலை வீடு திரும்பிய அவனைச் சந்தித்த பக்கத்து வீட்டுக்காரன், "இப்பொழுது என் உடல்நிலை பரவாயில்லை. காட்டில் விறகு வெட்டிக்கொண்டு இப்பொழுதுதான் திரும்புகின்றீர்களா?" என்றான்.

'காலையில் இதேசொற்களைக் கேட்டு, அவன் மீது சந்தேகப்பட்டேனே. இப்பொழுது சிறிதும் சந்தேகம் வரவில்லையே. எல்லாவற்றுக்கும் மனம்தான் காரணம் என்ற உண்மை அவனுக்குப் புரிந்தது.

## உங்கள் கைவண்ணம்



வே.சிவாஜினி
தரம் - 9
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.



அ.சஞ்ஜீவ்
தரம் - 9

# சரியான தண்டனை


ஆசிரியர் ஒருவர் தன் மாணவனுக்கு எல்லா ராகங்களையும் கற்றுக்கொடுத்தார். அந்த மாணவனின் படிப்பு முடிவடைந்தது. அவன் தன் ஊருக்குச் செல்வதற்காக, ஆசிரியரிடம் விடை பெறச் சென்றான். அப்போது அந்த ஆசிரியர் "நீ என்னை விட மிகச் சிறந்தவனாக ஆகிவிட்டாய். ஆனால், ஒன்றை மட்டும் மறந்துவிடாதே - ஆகிரி ராகத்தை மட்டும் ஓதாதே. ஓதினால் - அன்று முழுவதும் உனக்கு உணவு கிடைக்காது" என்றார். அவரின் அறிவுரைப்படி நடப்பதாகக் கூறிவிட்டு, தனது பொதிமூடடையை எடுத்துக் கொண்டு, தனது ஊருககுப் புறப்பட்டான். இடை நடுவில் மூங்கில் மரத்தடியில் இளைப்பாறுவதற்கு அமர்ந்தான். தனது பொதி மூட்டையை மரக்கிளையில் கட்டும்போது, அவனுக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டது.



பொதி மூட்டை இருக்கிறது தானே, என்ன அச்சம். அந்த ஆகிரி ராகத்தைப் பாடினால் என்ன என்று, மதிய நேரம் வரை பாடினான். பாடலை நிறுத்திவிட்டு மூட்டையைப் பார்த்தான். அது எட்டாத தூரத்தில் இருந்தது. மூங்கில் மரக்கிளை காலையில் மண்ணில் முட்டிக்கொண்டு இருக்கும். வெயில் ஏற ஏற மேலே போகும். ஆசிரியர் சொல்லைத் தட்டியதால்தான், பசியால் வாடுகிறேன் என்று எண்ணிக்கொண்டு, பசியோடு தன் வீடு நோக்கிச் சென்றான்.

வோ.தேனுஷா
தரம் - 5
கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

## வண்ணத்துப் பூச்சிக்கு அருகில் வனஜா சென்று விளையாட வழிகாட்டுங்கள்



நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

*சிறுகாப்பின் பேரிடத்து ஆகி உறுபகை*
*ஊக்கம் அளிப்பது அரண்.*

- திருக்குறள்

## நமது நோக்கு

### அகாஷியின் மீள் வருகையும் புலிகளுக்கான புது அழைப்பும்

ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி மீண்டும் ஒரு உச்சி மாநாட்டை நடத்தும் திட்டத்துடன், கொழும்புக்கு வருகை தரவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி நடத்தப்படவுள்ள இந்த உச்சி மாநாட்டின் பிரதான நோக்கம், கடந்த ஜூன் மாத்தில் - ஜப்பானின் ரோக்கியோ நகரில் நடைபெற்ற இலங்கைக்கு, உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாட்டில் வழங்கப்பட்ட 3.8 பில்லியன் டொலர் நிதியை, எவ்வாறு பயன்படுத்துவது குறித்து ஆராய்வதே ஆகும் என்று, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெறவுள்ள இந்த உச்சிமாநாட்டில், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் தொடர்பான அரச நிறுவனங்கள், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட, அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல் அதிகாரிகள் பலரும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் கூறியதுடன், இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இங்கு நினைவிற் கொள்ளவேண்டிய விடயம், முன்னர் ரோக்கியோவில் நடைபெற்ற உச்சி மாநாட்டை விடுதலைப் புலிகள் புறந்தள்ளியிருந்தார்கள் என்பதேயாகும். அது மட்டமல்ல அந்த மாநாட்டில் சமாதான ஏற்பாட்டாளர்களாகிய நோர்வே நாட்டின் முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ளவில்லை.

சமாதானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட இந்த நிதி தொடர்பான மாநாட்டின், சமாதான நடவடிக்கைகளின் முக்கிய பங்காளியான விடுதலைப் புலிகள் பங்குகொள்வதற்கான இயல்பான சூழல் ஒன்றை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பும் கால அவகாசமும் இருந்தும் கூட, அரசாங்கம் அதனைப் பயன்படுத்தி அதற்கான செயற்பாடுகளை அப்போது மேற்கொள்ளத் தவறிவிட்டிருந்தது. அரசின் அக்கறையும் பொறுப்பற்ற தன்மையையே அப்போது உணர்த்தியிருந்தது.

விடுதலைப்புலிகளின் பங்கேற்புடன் கிடைக்கக்கூடிய ஆதரவை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் பெற்றுக்கொள்ளாமலேயே, அந்த மாநாடு நடத்தப்பட்டு நிதியுதவி தொடர்பான முடிவுகளும் எடுக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளை பங்குபற்றவைக்க-யசூஷி அகாஷி கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டபோதும் பலனளிக்கவில்லை.

அப்போது கிடைத்த நிதி தாம் எதிர்பார்த்ததைவிடவும் அதிகம் எனவும் அரசு பெருமைப்பட்டுக்கொண்டது. ஆனாலும் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட பெருந்தொகை நிதி சமாதான நகர்வுகளின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே வழங்கப்படும் எனவும் முடிவு எடுக்கப்பட்டதையடுத்து, சமாதான நகர்வுகளை எப்படியாவது தொடர்ந்து முன்னெடுக்கும் முயற்சியை தொடரவேண்டிய நிர்ப்பந்தமும் அரசுக்கு ஏற்பட்டது.

ரோக்கியோ மாநாட்டில் எடுக்கப்படவிருந்த தீர்மானங்கள் சரியான முறையில் நிறைவேற்றப்படவும், ஒதுக்கப்படவிருந்த நிதி பாதிக்கப்பட்டவர்களின் அபிவிருத்தித்திட்டங்களில் உரிய வகையில் பயன்படுத்துவதையும் உறுதிசெய்வதற்கு - விடுதலைப் புலிகள் அப்போது கோரிநின்ற அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாக கட்டமைப்பு தொடர்பான உத்தரவாதத்தைக்கூட தரமுடியாத தர மனமற்ற ஒன்றாக அரசு அன்று தன்னை இனங்காட்டி நின்றது.

எனவே தான் விடுதலைப்புலிகள் அந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளாது ஒதுங்கிநின்றார்கள். அரசு தெரிவித்த அர்த்தமற்ற மாற்று யோசனையை புலிகள் நிராகரித்திருந்தார்கள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு சில புற அழுத்தங்களை - சில வெளிச்சக்திகள் மேற்கெள்ளமுயன்றபோதும், விடுதலைப்புலிகள் தமது கோரிக்கையில் உறுதியாக நின்றார்கள்.

அரசு வேறு வழியின்றி பின்னர் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஒரு வரைபொன்றை உருவாக்கி - விடுதலைப் புலிகளிடம் கையளிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இப்போது விடுதலைப்புலிகள் இதே இடைக்கால நிர்வாகம் தொடர்பான மாற்று யோசனை தயாரித்து தலைவர் பிரபாகரனன் பரிசீலனைக்கு ஒப்படைத்துள்ள நிலையில், மீண்டும் ஒரு மாநாடு குறித்த அறிவிப்பினை அதே ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி விடுத்துள்ளார்.

முதல் மாநாட்டின் முன்னர் விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, இன்னமும் அரசு ஒரு சரியானதும் தீர்க்கமானதுமான முடிவுக்கு வராதநிலையில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான எந்த அபிவிருத்தி நடவடிக்கையிலும் சரியானதோர் - அதிகாரங்களைக்கொண்ட நிர்வாகக் கட்டமைப்பொன்று உருவாக்கப்படாதவரையில் - எந்தவகையிலும் உருப்படியான ஒன்றாக இந்த மாநாடு அமையப் போவது கிடையாது.

அந்த வகையில், இத்தகைய உச்சமாநாடு நடத்தப்படுவது அர்த்தமற்ற வெறும் அறிக்கைவிடும் நிகழ்வாக மட்டுமே அமையும். எனவே, எந்தவொரு நிதிப்பயன்பாடு - மற்றும் திட்டமிடல் அபிவிருத்தி நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு அவசியமானதும், அவசரமானதுமான இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்றை அதற்குரிய சகல அதிகாரங்களுடன் உருவாக்குவதற்கு சர்வதேச சமூகமும், இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகளும் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே பொறுப்பான பணியாக அமையும்.

அவ்வாறின்றி, சும்மாகூடிப்பேசி திட்டமிட்டு, அறிக்கை விட்டுக்கலையும் இத்தகைய மாநாடுகளால் எதுவும் உருப்படியாக சாதித்துவிட முடியாது. இந்த நிலையில் ரோக்கியோ மாநாட்டை நிராகரித்த விடுதலைப் புலிகள் கொழும்பு மாநாட்டுக்கான அழைப்பை ஏற்று அதில் கலந்து கொள்வார்களா என்பது சந்தேகமே...

அர்த்தமற்ற எதனையும் விடுதலைப் புலிகள் அங்கீகரித்தாக வரலாறு இல்லை...

# இராணுவ அதிகாரிகளின் விருப்பத்திற்காக மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க முடியாது!

## பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ அதிகாரிகளின் சுய விருப்பத்திற்கு ஏற்ப மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்த முடியாது என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக்கு முன்னதான கூட்டத்தில் உரையாற்றும்போதே, பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ள பெரும்பாலானோர் சமாதானத்தையே விரும்புகின்றனர். யுத்தம் ஆரம்பிக்கப்படுவதை மக்கள் ஒருபோதும் விரும்பவில்லை. மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் கொள்கையுடனேயே அரசு செயற்பட்டு வருகிறது.

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும், அதன் பின்னர் வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் யுத்தத்தின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என எண்ணியிருந்தன. ஆனால், அவ்வாறு ஒருபோதும் நடைபெறவில்லை.



இராணுவ அதிகாரிகளின் விருப்பத்திற்கு ஏற்பவே முன்னைய அரசுகள் யுத்தத்தை நடத்தி வந்தன. அந்த யுத்தத்தினால் தீர்வு எதுவும் கிடைக்கவில்லை.

இன்றைய சூழ்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி சமாதானத்தை விரும்பி, பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறது. இராணுவ அதிகாரிகளின் பேச்சுக்கு மதிப்பளிக்காமல் சமாதான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்கிறது.

முன்னைய அரசுகள் நிறைவேற்ற முடியாத நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எமது அரசு முயற்சி செய்கிறது என்றும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார். (01)

# முப்படை ஆயுதக் கொள்வனவுக்கு அமைச்சரவையில் குழு நியமனம்!

முப்படைகளுக்கும் மற்றும் பொலிசாருக்கும் அவசியமான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்கு, அமைச்சரவைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் - மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரிய, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி ஆகியோர் இந்தக் குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்தக் குழு - ஆயுதங்கள் கொள்வனவு செய்வது தொடர்பான விலைகள் கோரல் செயற்பாடுகளைக் கையாளும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## யாழில் இடம்பெயர்ந்தவர்களுக்கு பதின்மூன்று மில்லியன் ஒதுக்கீடு!

யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலய பிரச்சினைகள் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிகமாக ஓலைக்குடிசைகளில் வசிப்பவர்களுக்கு சகல வசதிகளையும் கொண்ட கட்டடங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது.

இதனால் 2022 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 275 பேர் நன்மையடையவுள்ளார்கள். இதற்கென யு.என்.எச்.சி.ஆர். 11 மில்லியன் ரூபாவையும், புனர்வாழ்வு அமைச்சு 2 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கியுள்ளது.

இனிவரும் மழை காலத்தின்போது, குடிசை வாழ் மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கவேண்டிவரும் என்பதனாலேயே இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

கட்டுவன் பகுதியில் தற்காலிகமாக கொட்டில்களில் வாழும் மக்களின் நிலைமையை அண்மையில் பார்வையிட்ட அமைச்சர் மகேஸ்வரன், இராணுவத்தின் சிவில் நிர்வாக இணைப்பதிகாரி கேணல ரத்னாயக்கா ஆகியோர், அவர்களுக்கு கட்டடங்கள் அமைத்துக்கொடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். எனினும் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 13 மில்லியன் ரூபா போதுமானதாக இல்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாக இருக்க முடியும்!

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கக் கூடிய பங்காளியாக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளதென்பதை இரு தரப்பினரும் புரிந்துகொள்ள வேண்டுமென அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தேர்தல் ஒன்றை நடத்தாமல் ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டுவர முடியுமா என்ற கேள்விகள் எழுந்துள்ள தற்போதைய சூழ்நிலையில்,

புத்தளம் மாவட்டத்தில் நிலவும் அரசியல் முரண்பாடுகள், பிரச்சினைகள் குறித்து புத்தளம் நகரசபையில் நடந்த கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பலவித முரண்பாடுகள் நிலவும் இந்தச் சூழ்நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வீடுகளில் ஜனாதிபதியும், பிரதமரும் ஒன்றாக அமரக்கூடிய சூழ்நிலை இன்று உருவாகி இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

தேர்தலில் எந்தக் கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடப் போகிறது என்ற நிலைமை வரும்வரை தங்களின் கட்சியை விமர்சிப்பதை இந்த இரு கட்சிகளும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

# சமாதான நீதிவான்களாக நியமனம் பெறுவோர் விபரம்!

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் சிபாரிசின் பேரில், 55 பேர் அகில இலங்கை சமாதான நீதிவான்களாக நீதி அமைச்சால் யாழ்மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குரிய நியமனங்கள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுடைய அலுவலகத்தில் வைத்து நாளை வழங்கப்படவுள்ளன.

நியமனம் பெற்ற 55 பேரின் பெயர் விபரம் வருமாறு.

எஸ்.கிருபைராஜ் (கரணவாய் தெற்கு), ஆர்.இராஜகுமாரன் (யாழ்ப்பாணம்), ஆர்.ஜெயராஜா (திருநெல்வேலி), ஆர்.செயசேகரன் (கந்தர்மடம்), ஆர்.நித்தியானந்தன் (யாழ்ப்பாணம்), எஸ்.சுப்பிரமணியம் (உடுப்பிட்டி), எஸ்.முத்துக்குமாரசாமி (கோண்டாவில்), ஆர்.சிவபாலு (நல்லூர்), எஸ்.இரட்ணராசா (காரைநகர்), ஆர்.சிவலிங்கம் (கொக்குவில்), ஜே.பிரான்சிஸ் (தாளையடி), ஜே.நிக்கிலாஸ் (யாழ்ப்பாணம்), ரூபன் மரியாம் பிள்ளை (யாழ்ப்பாணம்), எஸ்.குமாரசாமி (ஆனைக்கோட்டை), எஸ்.நாகலிங்கம் (கரணவாய் தெற்கு), ஆர்.சிவபுண்ணியம் (பருத்தித்துறை), எஸ்.கனகராசா (நல்லூர்), எஸ்.குணபாலசிங்கம் (யாழ்ப்பாணம்), எஸ்.தங்கேஸ்வரன் (பருத்தித்துறை), எஸ்.கோகிலதாசன் (கரவெட்டி), எஸ்.சாந்தலிங்கம் (பருத்தித்துறை), எஸ்.சுந்தரேஸ்வரக் குருக்கள் (இணுவில்), எஸ்.மன்மதராஜலிங்கம் (நல்லூர்), ஆர்.இராஜேந்திரம் (அல்வாய்), எஸ்.கார்த்திகேசு (வேலணை), எஸ்.சின்னையா வீரசிங்கம் (கரவெட்டி), எஸ்.புவனேசமூர்த்தி (யாழ்ப்பாணம்), எஸ்.தம்பிராஜா மகாலிங்கம் (வேலணை), எஸ்.சிவராசா குருக்கள் (நல்லூர்), எஸ்.நவரட்ணராசா (குப்பிளான்), எஸ்.சிவஞானசுந்தரம் (யாழ்ப்பாணம்), எஸ்.சிவசூரியகுமாரன் (கரவெட்டி), ஆர்.கந்தையா (நெடுந்தீவு), ரி.ராயுமேஸ் (யாழ்ப்பாணம்), எஸ்.பிரபாகரன் (கரவெட்டி), ரி.கந்தசாமி (இணுவில்), ஆர்.ஞானகுமார் (யாழ்ப்பாணம்), ஆர்.பரதன் (மண்டைதீவு), ஆர்.யோகராஜா (நல்லூர்), ஆர்.பரமநாதன் (கரவெட்டி), ஆர்.பூபாலசிங்கம் (யாழ்ப்பாணம்), எஸ்.மாணிக்கம் (புங்குடுதீவு), எஸ்.கதிரமலை (மாதகல்), எஸ்.சோமசேகரம் (யாழ்ப்பாணம்), குமாரசாமி சண்முகலிங்கம் (புங்குடுதீவு), பி.அற்சுதம்பிள்ளை (யாழ்ப்பாணம்), பி.பாக்கியராஜா (அரியாலை), பி.பாஸ்கரன் (ஆனைக்கோட்டை), பி.ராஜரட்ணம் (நல்லூர்), பி.புலேந்திரராஜா (யாழ்ப்பாணம்), தி.சுப்பிரமணியம் (பருத்தித்துறை) எஸ்.மகாலிங்க சிவகுருக்கள் (யாழ்ப்பாணம்), எஸ்.மகேஸ்வரன் குருக்கள் (யாழ்ப்பாணம்), எஸ்.ஜெயசிங்கம் (மீசாலை).

## 10 ஆயிரம் ரூபா செலுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்!

கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிட பிரேம திலக 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் பிணையாகச் செலுத்தியுள்ளார்.

கீதுல பொலீஸ்நிலையத்தில் தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவியைப் பயன்படுத்தி சிறையில் இருந்த ஒரு கைதியை விடுவித்தார் என்ற காரணத்தினாலேயே, கோவிட பிரேமதிலக பிணைப்பணம் செலுத்த வேண்டியேற்பட்டது.

இது தொடர்பான சட்ட விசாரணைகள் இடம்பெறும்போது ஆஜராகும்படியும் பிரேம திலகவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திய சட்டமா அதிபரே பிணைப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.26 | 96.75 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.67 | 152.30 |
| 1 யூரோ | 103.60 | 105.28 |
| 1 சுவிஸ் பிராங் | 67.45 | 68.78 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 61.30 | 62.37 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.82 | 25.82 |

# கிழக்கு முஸ்லிம்கள் உணர்ச்சிவசப்படாமல்



வடக்கு - கிழக்கில் முழுமையாக நிர்வகிக்கக்கூடிய அதிகாரங்கள் கொண்ட, நிர்வாகசபை அமைக்கப்படுமா? மீண்டும் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும், தமிழீழ விடுலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுத் தொடங்குமா?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும்வரை - புலம்பெயர்ந்தவர்கள், தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பமுடியாமல், இன்னமும் அகதி வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டு இருக்க வேண்டியதுதானா?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் தருவதற்குமுன், இன்னும் சில மாதங்களுக்குள் இன்று ஆட்சிபீடத்தில் உள்ளவர்களை, நாங்கள் விரட்டி அடிப்போம் என்று ஜனாதிபதி சந்திரிகாவின் தம்பியாரும், அவரின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்க சூளுரைத்துள்ளார்.

இதேசமயம் - நாட்டின் தற்போதையநிலையில், உடனடி ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதை விட, நாட்டைக் காப்பாற்றுவதற்காக விரைவில் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

சந்திரிகா அம்மையாரின் தந்தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்காக, 1951 ஆம் ஆண்டில் ஆரம்பித்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 52 ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டில் பேசுகையிலேயே- ஜனாதிபதியும், சுதந்திரக்கட்சின் தலைவியுமான சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

ரணிலின் ஐக்கிய தேசிய அரசாங்கத்தை வீழ்த்தவேண்டும். சந்திரிகா தலைமையில் புதிய கூட்டு அரசு அமையவேண்டும் அல்லது அவசியமேற்பட்டால், ஜனாதிபதி தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆட்சியைக் கலைத்து, நாடாளுமன்றத்துக்குப் புதிய தேர்தல் நடத்தவேண்டும். அதுவரை ஜனாதிபதியே ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டும். இதுவே சுதந்திரக்கட்சி மாநாட்டின் விருப்பமாக வெளிபபட்டது.

இடைக்கால நிர்வாகசபை உருவாக்கப்படுவதை, சிறிலங்கா சுதந்திரக்கட்சி தமது திட்டத்துக்கேற்ப விரும்பினாலும்கூட, மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி. விரும்பவில்லை. இதனால், இடைக்கால நிர்வாகசபை பற்றி, விடுதலைப் புலிகள் - ரணில் விக்கிரமசிங்கவின் அரசிடம் கையளிக்கவிருக்கும் இடைக்கால நிர்வாகசபையின் கட்டமைப்புப் பற்றிய யோசனைகளை - ஜனாதிபதியும், அவரது சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அது, கூட்டுச்சேர்த்துக் கொள்ளவிரும்பும் மக்கள் விடுதலை முன்னணியும் ஏற்கப்போவதில்லை.

சமாதானப் பேச்சுக்களுக்கும், இடைகால நிர்வாக சபைக்கும் எதிராகக் கூச்சல்போடும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் இனித் தமது எதிர்ப்பு அலைகளை விரிவுபடுத்தி, வேகப்படுத்த ஆயத்



தமாவர். ஏற்கனவே, காலியிலிருந்து கொழும்புக்கு ஜே.வி.பியினர் வெற்றிகரமாக ஒரு பாதயாத்திரையை நடத்தி முடித்திருக்கின்றனர். இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் கலந்து உற்சாகமளித்தனர். அடுத்த பாதயாத்திரை - கண்டியிலிருந்து கொழும்பை நோக்கி நடக்குமென்று ஜே.வி.பி அறிவித்திருக்கிறது.

1957 ஆம் ஆண்டில் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து, ஜே.ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் கொழும்பிலிருந்து பாதயாத்திரை செய்தனர். வழியில் கம்பஹா எம்.பி - எஸ்.டி. பண்டாரநாயக்க (சுதந்திரக் கட்சி) இம்புல்கொட என்ற இடத்தில் தடுத்து, குழப்பம் செய்தபோதிலும், ஜே.ஆர். பாதயாத்திரையைத் தொடர்ந்து, வெற்றிகரமாக நிறைவேற்றினார். இந்தப் பாதயாத்திரையைத் தொடர்ந்து பண்டாரநாயக்கவின் மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சரவையில் அங்கம் வகித்த திருமதி விலோ விஜயவர்த்தன உட்பட, சில அமைச்சர்களும் பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, பிரதமர் பண்டாரநாயக்கவின் இல்லத்துக்குமுன், மறியல் போராட்டம் நடத்தினர். பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் பிரதேசசபைகளுக்கு - கல்வி, காணி, குடியேற்றம் சம்பந்தமான அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததே, இந்த எதிர்ப்

# நிதானமாக நடந்து கொள்வது அவசியம்

புக்குக் காரணம் என்று கூறப்பட்டது. எதிர்ப்பினால், பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகசபைக்கு, வடக்கு - கிழக்கை நிர்வகிக்கும் முழு அதிகாரத்தை அவர்கள் கோருகிறார்கள்.

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகமொன்று, நடைமுறைச் சாத்தியமான- நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டதாயிருக்கவேண்டும். வடககு- கிழக்கை முழுமையாக நிர்வகிக்க முடியாத அதிகாரத்தினால், எதுவித பயனுமில்லை. அனைத்து அதிகாரங்களுமிருந்தால்தான், இடைக்கால நிர்வாகசபையை இயக்கமுடியும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

உலகில் உள்நாட்டுப் போர் நடைபெற்ற நாடுகளில், இடைக்கால நிர்வாகசபைகள் அங்கு முழு அதிகாரங்களுடன் நிறுவப்பெற்றதையும் தமிழ்ச்செல்வன் உதாரணமாகக் காட்டியிருக்கிறார்.

பாரிஸ், சுவிஸ் என்று வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு, அங்குள்ள சட்டவல்லுநர்களுடனும் ஆராய்ந்து தயாரித்த இடைக்கால நிர்வாகசபை கட்டமைப்புக்கான தமது திட்டத்தை, இந்தமாத இறுதிக்குள் அரசிடம் வழங்கவிருக்கிறார்.

இடைக்கால நிர்வாகசபையின் அதிகாரங்கள் குறித்து, ஆளும் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு இருப்பது பகிரங்க இரகசியம். எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

பாரிஸில் தாம் சந்தித்துப்பேசிய இராஜதந்திரிகளும்- தனது யோசனைகளுக்கும், கருத்துக்களுக்கும் ஆதரவு தெரிவித்திருப்பதாகத் தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனையை அல்லது திட்டத்தைச் சாட்டாகவைத்து, எதிர்க்கட்சியினர்- ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும், வேலை நிறுத்தங்களையும் மேற்கொள்ளக் கூடும். ஆளும்கட்சிக்குள்ளேயுள்ள எதிர்ப்பாளர்களும் - பிரதமர் ரணிலுக்கு எதிராகத்திரண்டு, அழுத்தம் கொடுக்கக்கூடும். இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, பிரதமர் ரணில்- விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து, சமாதானப் பேச்சுக்களையும் முறித்துக்கொள்ள முன்வந்தால், இப்பொழுது இலங்கையில் சமாதானத்தை ஏற்படுதுவற்காக முன்வந்து, முயற்சி செய்யும் வெளிநாடுகள், என்ன செய்யப் போகின்றன? இதற்குமேலும், தமிழ் மக்கள் அழிவை எதிர்நோக்க முடியாது.

போர்நிறுத்த காலத்திலும், பேச்சுவார்த்தை நடைபெறும் காலத்திலும் கூட, விடுதலைப் புலிகளை இன்னுமே பயங்கரவாதிகள் என்றே பிரசாரம் செய்யும் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள் சிலரும், சில சிங்கள, ஆங்கில ஊடகங்களும் - சமாதானப்பேச்சுகள் முறிவடைந்தபின், விடுதலைப் புலிகள் என்ன செய்யவேண்டும் என எதிர்பார்க்கின்றன.

விடுதலைப் புலிகளை ஒதுக்கி



விட்டு, நால்வர் கூட்டணியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என சந்திரிகாவும், ஜே.வி.பியினரும் எதிர்பார்க்கின்றனரா?

ரணில் ஆட்சியைக் கவிழ்த்து, சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தாலென்ன, சந்திரிகாவே தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பாவித்து சர்வாதிகாரியாக வந்தாலென்ன - இலங்கை இனப்பிரச்சினைக்கு- தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தான் தீர்வுகாணவேண்டும்.

இப்பொழுது வடக்கிலும், கிழக்கிலும் விடுதலைப்புலிகளே- இலங்கை அரசுக்குச் சமமானதாக நிர்வாகம் செய்துவருகின்றனர். மீண்டுமொரு போரைத் தொடங்கி, இலங்கை அரச நிர்வாகத்தை முழு நாட்டிலும் விஸ்தரிப்பதாக இருந்தாலும், வெளிநாட்டிலிருந்து ஆயுதங்கள்தான் வரமுடியுமேயன்றி, ஆட்கள் வந்து செயற்படமுடியாது. அப்படி வருவதாக இருந்தால், அது ஒரு ஆக்கிரமிப்பாக இருக்குமேயன்றி, உதவியாக இருக்கமுடியாது.

**எஸ்.எம்.ஜி**

இந்தநிலையில், கிழக்கிலுள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படுமென நாம் பலதடவைகள் தெளிவுபடுத்தியுள்ளோம் என்று தமிழ்ச்செல்வன் கூறியிருக்கிறார்.

இந்தநிலையில், விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டம் பற்றித் தெரியும்வரை, பொறுத்திருக்க - கிழக்கு முஸ்லிம்கள் முடிவு செய்திருப்பது வரவேற்புக்குரியது. அரசியல் தலைவர்கள் அடுத்த தேர்தலைக் கண் வைத்துத் தெரிவிக்கும் கருத்துக்களுக்கு உணர்சசிவசப்படாமல், கிழக்கு முஸ்லிம் மக்கள் நிதானமாக நடந்து கொள்வது அவசியம்.

# படையினரின் - பொங்குதமிழ் எதிர்ப்பிற்கு கிராம உத்தியோகத்தர் சங்கம் கண்டனம்!

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் ஒரே மேசையில் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்போது, அவர்கள் பங்குபற்றும் நிகழ்வுகளில்- அரசஉத்தியோகத்தர்கள் ஏன் பங்குபற்றமுடியாது. சமாதானத்திற்காக நடாத்தப்படும் பொங்குதமிழ் நிகழ்வில், நாம் பங்குபற்றுவதைத் தடைசெய்வதை நிறுத்தவேண்டும்.

இவ்வாறு வவுனியா மாவட்ட சிறிலங்கா ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

எமக்குத் தெரிந்தவரை, பெங்குதமிழ் விழா என்பது, முற்றுமுழுதாகச் சமாதானத்தை வலியுறுத்தும் நிகழ்வாகும். இதில் அரசியல் இருப்பதாகத் தெரியவில்லை. பலதரப்பட்டோராலும் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வாகவே நாம் இதைப் பார்க்கிறோம். ஊரில் நடைபெறும் பல நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு கிராம உத்தியோகத்தர்கள் அழைக்கப்படுவதுபோலவே, இந்த நிகழ்வு சம்பந்தமான கூட்டத்திற்கும் கிராம உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டிருந்தோம். இதில் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் விடுதலைப் புலிகளின் பங்கிருப்பதால், இந்த நிகழ்வில், கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டது, கலந்துகொள்வது சரியா? பிழையா? எனக் கேள்விக்குறி ஏற்பட்டுள்ளது. தமிழ் பிரதேசங்களில் இன்று நடைபெறும் பல நிகழ்வுகளிலும், விடுதலைப் புலிகள் கலந்து கொள்கிறார்கள். இதேபோன்று, பொங்குதமிழ் நிகழ்விலும் விடுதலைப் புலிகளும் கலந்துகொள்ளக் கூடும். அவர்கள் ஏனைய கிராம அமைப்புக்கள் போன்று, தமது பங்களிப்பையும் இந்தவிழாவுக்கு வழங்கக்கூடும். இதனால், இந்த நிகழ்வில் கிராம உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளக்கூடாது எனக் கருதுவதற்கு நியாயமிருப்பதாகத் தெரியவில்லை. எமது பிரதேசங்களில் ஏற்கனவே விடுதலைப் புலிகள் கலந்துகொண்ட, ஊர்மக்களின் பல நிகழ்வுகளில் நாம் கலந்து கொண்டுள்ளோம். பொங்குதமிழ் விழாவில் கலந்து கொள்வதைமட்டும் சந்தேகக் கண் கொண்டு, கேள்வி எழுப்புவதின் உண்மைநிலை என்ன என்பது புரியாத புதிராகவுள்ளது.

சமாதானத் தீர்வுக்காகப் பேசும் தமிழர்தரப்பாக விடுதலைப் புலிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கும்போது, கிராமஉத்தியோகத்தர்களை அவர்களிடமிருந்து விலகி இருக்குமாறு கூறுவது சாத்தியமான ஒன்றாகத் தெரியவில்லை. இந்த நாட்டிற்கு இன்று தேவைப்படுவது சமாதானம். இதற்காக எல்லோரும் குரல்கொடுக்கும் போது, கிராம உத்தியோகத்தர்களும் இதற்காகத் தமது பங்களிப்பை நல்குவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

ஜனநாயக வழியில் நம்பிக்கை இழந்து, ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள், ஆயுதத்தைக் கீழே வைத்து, சமாதானத்தை நாடிநிற்கும்போது, ஜனநாயகம் அவர்களை வரவேற்கவேண்டும். ஜனநாயகத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படக்கூடியதாக, நடக்கின்ற செயல்கள் இருக்கவேண்டும். ஜனநாயக வழிகளில் தடைகளை ஏற்படுத்தி, ஜனநாயகத்தின்மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவது - சமாதானம் சீர்கெட்டுப் போவதற்கே இடமளிக்கும்.

கடந்த பல வருடங்களாக தமிழ்மக்கள் தமது கருத்துக்களை வெளிக்காட்டமுடியாதவாறு, ஒடுக்கப்பட்டிருந்தனர். இதுவரை வெளிப்படுத்த முடியாமல் போன கருத்துக்களை, வெளிப்படுத்த இவர்களுக்கு இடம்கொடுக்கப்பட்டால், தமது உண்மையான நிலையை அவர்கள் வெளிப்படுத்தி, தமது மனத்திலுள்ள சுமையைக் குறைத்து, சாந்தம் அடையக்கூடும். ஆகவே, வீண் விதண்டாவாதங்களுக்கு இடம்கொடுக்காமல், சமாதானத்தை வேண்டி நடாத்தப்படும் - பொங்குதமிழ் நிகழ்வுகளில், கிராம உத்தியோகத்தர்கள் தாம் விரும்பியபடி நடந்துகொள்வதைத் தடைசெய்யாமல் இருக்குமாறு, சமாதானத்தை விரும்பும் சகல தரப்பினரையும் அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

### அம்பாறையில்

# மோட்டார் சைக்கிள்-வான் விபத்தில் தபால் ஊழியர் பரிதாபகர மரணம்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட தபால்நிலையத்தில் கடமைபுரியும் ஊழியர் ஒருவர், கடமை முடிந்து மோட்டார்சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை, வான் ஒன்றுடன் மோதுண்டு பலியானார்.

கடந்த புதன்கிழமை மாலை நான்கு மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் - மல்வத்தையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பொடிசிங்கம் விஜயசிங்க (வயது 35) என்பவரே இவ்வாறு இறந்தவராவார்.

இவரை மோதிய வான் - சம்பவ இடத்தில் நிற்காமல் தப்பிச்சென்று விட்டதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகளைச் சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (07)

# வடமராட்சி மக்களின் தேவைக்கு வடமராட்சி கிழக்கில் மண் அகழ்வு

### அனுமதி வழங்குவது குறித்து முடிவு

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேச மக்களின் மண் தேவையினைப் பூர்த்திசெய்வதற்கு - வடமராட்சி கிழக்கிலிருந்து மண்ணை அகழ்வதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்று பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் க.அரியநாயகம் தலைமையில், பிரதேசசெயலர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றபோது, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலில் யுத்தநடவடிக்கைகளினால் சேதமடைந்த கட்டடங்கள் மற்றும் புதிய க்கட்டடங்கள் அமைக்கும் பணி-பாதிப்படைந்துள்ளதையடுத்து, இந்தச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

சட்டவிரோதமாக மண் அகழப்பட்டு, வேறு பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுவருகின்றது. பொது மக்களின் தேவைகளை கருத்திற்கொண்டு, வடமராட்சி கிழக்கில்- அம்பன், குடத்தனை பகுதிகளில் மண் அகழ்வது என்றும், மண் ஏற்றிச்செல்லும் வீதிகளுக்கான வீதி அனுமதியினை வழங்குவது என்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் மண்ணை ஏற்றிச்செல்வதற்கான அனுமதியினை, பிரதேச செயலர்கள் வழங்குவது என்றும் கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(202)

ஈராக்கிற்கு மேலதிக படைகளை அனுப்பக்கோரும்

# அமெரிக்காவின் கோரிக்கைக்கு பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவிப்பு!



ஈராக்கிற்கு புறப்படும் முன்பாக தன்மகளிடம் பிரியாவிடை பெறும் அமெரிக்கப்படை வீரர் ஒருவர்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் கவுன்சிலின் பலமான எதிர்ப்புகளுக்கு - அமெரிக்கா முகங்கொடுக்க வேண்டியநிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபையிடம் - ஈராக்கில் கடமைபுரிவதற்கு, கூடுதலான சர்வதேச படைகளை பெறுவதற்குரிய அனுமதியைக் கோரியிருந்தது.

இந்த விடயத்தை பாதுகாப்பு கவுன்சிலில் சமர்பிப்பதற்கு முன்னர், நேற்று ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் ஐந்து காரியதரிசிகள், மேற்படி விடயம் தொடர்பாக விவாதத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்காவின் மேற்படி கோரிக்கைக்கு - பிரான்ஸும், ஜேர்மனியும் தமது பலமான எதிர்ப்பைத் தெரிவித்தன. ஈராக்கின் கட்டுமானப் பணிகளில் - ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்று, மேற்படி இருநாடுகளும் குற்றஞ்சுமத்தின.

அனேகமான ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த நாடுகள் ஈராக்கிற்கு படைகளை அனுப்புவதற்கு முன்வரவில்லை. அதேவேளை, பிரித்தானியா - கூடுதலான படைகளை ஈராக்கிற்கு அனுப்புவது தொடர்பாக ஆராய்ந்து வருகிறது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபை சம்மதம் தெரிவித்தாலும், தாம் ஈராக்கிற்குப் படைகளை அனுப்பப் போவதில்லை என, அவுஸ்திரேலிய பிரதமர் கோவாட் - 'மெல்போன் வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஈராக் போர் ஆரம்பித்தபோது - 2000 துருப்புக்களை ஈராக்கிற்கு அனுப்பிய அவுஸ்திரேலியா, போர் முடிந்துவிட்டதாக அமெரிக்கா அறிவித்ததும், தனது படைகளை திருப்பி அழைத்துக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.


THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 1 இல் இருந்து மேற் படிப்பு வரை சிறந்த ஆசிரியர்கள், சகல பாடங்கள்.

426 (302), K.K.S. Road, Jaffna. (சி-1457)



ராஜா யாழ்ப்பாணம்.

மாதவன், சிம்ரன், சினேகா நடித்த

பார்த்தாலே பரவசம்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-1424)



நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், மனிஷா நடித்த

முதல்வன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

LONG KISS GOODNIGHT

இரவுக் காட்சி. 8.45 (பு.நே) (சி-1425)


# கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப் படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக் குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத்தொகை | மீளளிக்கமுடியாத தொகை |
|---|---|---|---|
| கல்வியங்காடு பொதுச் சந்தை புனரமைத்தல் | M6 | Rs.70,000/= | Rs.750/= |

2. நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 70,000/-வும் மீளளிக்க முடியாத தொகையாக ரூபா 750/- ஐயும் செலுத்தி 2003.09.18 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
6. "கேள்வி விண்ணப்ப (ஆவணம்) இணைப்பிரதிகளை யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற வேலைத்திட்ட பொறியியலாளர் காரியாலத்தில் இருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். "
7. பொறி வைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் "கல்வியங்காடு பொதுச்சந்தை புனரமைத்தல்" என எழுதப்படல் வேண்டும்.
8. பொறியிடப்பட்ட கேள்விகள் "தலைவர், யாழ். மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2003.09.19 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக எங்களுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். இதன் பின்னர் கேள்விகள் 2003.09.19 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகள் இடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்கமுடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டி திட்டப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.

மாவட்டக் கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
04.09.2003.


செ.பத்மநாதன்
தலைவர்,
மாவட்டக் கேள்விச்சபை
யாழ்ப்பாணம்.

(சி-1439)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ்.மாவட்டம்

## செப்ரெம்பர் 01 –07 வரை


மிதிவெடி, வெடிபொருட்களினால் ஏற்படும் ஆபத்தைத் தடுக்க பொது மக்களாகிய நாம் அவதானமாக இருப்போம்.



- நாங்கள் செல்லும் இடங்களிற்கு, முன்னர் பாவித்த பாதுகாப்பான பாதைகளையே பாவிப்போம்.
- நாம் புதிய இடங்களிற்குச் செல்லும்போது, அவ்விடத்தின் மிதிவெடி அபயாம் பற்றி அப்பிரதேச வாசிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்வோம்.



- எமதுபிரதேசத்திற்குள் புதிதாக வருபவர்களிற்கு எமது பிரதேசத்தின் பாதுகாப்புநிலை பற்றிய சரியான தகவல்களைக் கொடுப்போம்.
- மீளக்குடியமரும் பிரதேசமாக இருப்பின் அப்பிரதேசம் முழுமையாக மிதிவெடி இல்லாத பிரதேசமா என்பதை உறுதி செய்து, மீளக்குடியமருவோம்.
- இனம் புரியாத மர்மப்பொருட்களைக் கண்டால், உரிய இடங்களிற்கு அறிவிப்போம்.



- மிதிவெடிகள், வெடிபொருட்கள் சம்பந்தமான அபாயப் பலகைகள் உள்ள இடங்களிற்குள் நுழையாமலும், அபாயப் பலகைகள் உரிய இடத்தில் உள்ளது என்பதையும் உறுதிப்படுத்துவோம்.
- மிதிவெடி, வெடிபொருட்களின் பாதிப்புக்களை மற்றவர்களிற்கும் எடுத்துக்கூறி, மிதிவெடி, வெடிபொருட்களினால் ஏற்படும்பாதிப்பை தடுப்போம்.

## ஆபத்து நிறைந்த பூமியில் அவதானமாக நடப்போம்

மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் - யாழ்ப்பாணம்

(சி.1421)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ்மக்களின் அபிலாசைகளை மதித்து அரசு நிரந்தரத் தீர்வை வழங்க வேண்டும்!

## மட்டு.அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

தமிழ் மக்களின் உணர்வுகளை, அபிலாஷைகளை மதித்து, அவர்களுக்கான நிரந்தரத்தீர்வை வழங்க அரசு முன்வரவேண்டும். தமிழ் மக்களின் அபிலாஷைகள் இழுத்தடிப்புச் செய்யப்படுமானால், தமிழ் மக்கள் அனைவரும் தமிழீழத் தேசியத் தலைவர் வழியில் ஒருமித்து குரலெழுப்ப இந் நாளில் உறுதி எடுத்துக் கொள்வோம் என, மட்டக்களப்பு அம்பாறை, மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு மாவட்ட தமிழர் பெருமன்றம் ஏற்பாடு செய்த, தமிழீழ மக்கள் படுகொலை நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, கௌசல்யன் இதனைத் தெரிவித்தார்.

நேற்றைய நிகழ்வில் காலை 6.30 மணிக்கு மட்டக்களப்பு மாவட்ட வழிபாட்டுத் ஸ்தலங்களில் மணி ஓசை எழுப்பப்பட்டு, தொடர்ந்து அங்கு சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்றன.

சாலைகள், முக்கிய சந்திகளில் பதாதைகள், வளைவுகள் கட்டப்பட்டிருந்ததோடு, மக்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து தமது கடமைகளை மேற்கொண்டார்கள்.

பாடசாலைகளிலும் - கொல்லப்பட்ட மக்களை நினைவு கூரும் வகையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்றுக்காலை 10 மணியளவில், வந்தாறுமூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்த நினைவுநாளை கடைப்பிடிக்கும் பொதுக்கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில்- பொதுச்சுடரினை சத்துருக்கொண்டான் படுகொலையின்போது, தமது மூன்று பிள்ளைகளை இழந்த தாயாரான இராசம்மா கணபதிப்பிள்ளை ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை கௌசல்யன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து இதுவரை காலமும் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்பேசும் மக்களின் நினைவாக அமைக்கப்பட இருக்கும் தூபிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. இதற்கான அடிக்கல்லை வந்தாறு மூலை படுகொலையின் போது, தனது நான்கு பிள்ளைகளை இழந்த தந்தையான சண்முகம் இராசையா நாட்டிவைத்தார்.

தொடர்ந்து பொதுக்கூட்டம் - நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. நேற்றைய நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், செல்வம் அடைக்கலநாதன், சந்திரநேரு அரியநாயகம், கிருஷ்ணபிள்ளை, சுரேஷ் பிரேமச்சந்திரன், வெள்ளிமலை, பேராசிரியர் மனோசபாரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (107)

## திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில்

# ஈழத்து கூத்து விழா யாழில் நடைபெறும்!

திருமறைக்கலாமன்றம் நடத்தும் ஈழத்துக் கூத்துவிழா - எதிர்வரும் 11 ஆம், 12 ஆம், 13 ஆம், 14 ஆம் திகதிகளில் பகல் வேளையில், மறைகல்வி நடுநிலைய மண்டபத்திலும், இரவு வேளைகளில் - திருமறைக்கலாமன்ற அரங்கிலும் நடைபெறவுள்ளது.

ஈழத்தின் வெவ்வேறு பிரதேசங்களிலும் உள்ள கூத்து மரபுகளை அறியச் செய்தல், தேசிய அரங்கை நோக்கிய தேடலை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களோடு இக் கூத்துவிழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக திருமறைக்கலாமன்றம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட தினங்களில் பகல்வேளைகளில், முற்பகல் 9 மணி முதல் 1 மணிவரையும், பிற்பகலில் 2 மணி முதல் 5 மணிவரையும், இரவு வேளைகளில் மாலை 6.45 மணி முதல் நிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, வன்னி, மலையகப் பிரதேசக் கூத்துக்கள் அந்தந்தப் பிரதேசக் கலைஞர்களால் இந்நிகழ்வு மேடையேற்றப்படவுள்ளன.

# வெளிநாடுகளில் குடியேறியிருப்பவர்களில் கல்வியினைத் தொடர்வோர் 5 வீதத்தினரே!

## வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் தெரிவிப்பு

(வவுனியா)

யுத்தம் காரணமாக, தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் குடியேறியோரில் 5 வீதத்தினரே கல்வியைத் தொடர்வதாகவும், எஞ்சிய 95 வீதத்தினர் அந்ததந்த நாடுகளின் பொருளாதாரத்தை வளர்க்கவே அகதிகளாகியுள்ளனர் என, வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் கூறியுள்ளார்.

வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட சட்ட உதவி மன்றக் கருத்தரங்கிலே இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு மேலும் தெரிவிக்கையில் - கோர யுத்தம் காரணமாக, 10 லட்சம் தமிழர்கள் வெளிநாடுகளில அகதிகளாகியுள்ளனர். யுத்தம் இடம்பெறாமல் இருந்திருந்தால் அவர்கள் இந்த நாட்டின் அபிவிருத்தியில் பங்காளிகளாக இருந்திருப்ப தோடு, அவர்கள் தங்கள் கல்வித்துறையை மேம்படுத்திக் கொண்டிருப்பர் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், யுத்தம் இடம்பெற்று வந்த காலங்களில் தமிழ் மக்களின் கலை, கலாசாரம் சீரழிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

### மீண்டும்...

யுத்தத்துக்கான பாரிய செலவைக் கட்டுப்படுத்தி சுதந்திரமாக மக்கள் நடமாடும் வகையில் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருவதாகவும், போர்நிறுத்தத்தைப் பாதுகாத்து அரசியல் தீர்வை நோக்கி முன்செல்ல வேண்டியுள்ளதாகவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

### அமெரிக்க...

அமெரிக்க தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் சமாதான செயலணியின் தலைவராக இவர் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கண்காணிப்புக்குழு...

திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமனின் பொறுப்பின் கீழ் வருவதால், அவருடன் சந்தித்துக் கலந்துரையாடுமாறு, திலக் தெரிவித்துள்ளார்.

இதனால், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் , கேணல் பதுமனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

### விடுமுறைகளைக்...

திணைக்களங்களின் செயற்பாடுகள் குறைவாக இருக்கின்றது. மக்கள் தமது கருமங்களை இலகுபடுத்துவதற்காக, இந்தச் சட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. விடுமுறை நாட்களைக் குறைப்பது, ஊழியர்களின் நலனைப் பாதிக்காது என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (01)

### புதிதாகக்...

இதேவேளை படைத்தரப்பினரின் இந்த அத்துமீறல் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரவும், அந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த பொதுமக்களின் அமைப்புக்கள் முற்பட்டுள்ளன.

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அருகிலுள்ள குப்பிளான் வடக்கு, கட்டுவன் தெற்கு மற்றும் புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதிகளில் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்னர் விவசாயிகளினால், மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கைகளை நிறுத்துமாறு படைத்தரப்பு உத்தரவிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கலைஞர் கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேசசபை உள்ளூராட்சி வாரத்தையொட்டிய கலைஞர் கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கலும் இன்று நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் காலை 9 மணிக்கு இந்நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. இந்நிகழ்விற்கு, கரவெட்டி பிரதேசசபை செயலாளர் சி.பசுபதி தலைமை தாங்கவுள்ளார்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, கரவெட்டி பிரதேச செயலர் க. கனகரத்தினம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுகளில் - விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், கல்வி, சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (116)

### ராணுவ...

1421 பேர் தகுதிகாண் நிலையிலுள்ளவர்கள் எனவும் அந்தப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தப்பியோடிய படையினர், அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய தொகை, பிரதேச செயலகங்கள் ஊடாக அறவிடப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்மொழித் தினப்போட்டி

தேசிய மட்டத்தில் நடைபெறும் தமிழ் மொழித் தினப்போட்டி, அடுத்த மாதம் 9 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் - மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற யாழ்.வலயப்பகுதி மாணவர்கள் தம்மை தயார்படுத்துமாறு யாழ். வலய கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### பொ.ஐ.மு...

குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவருக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

# படைத்தரப்பு...

புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தை உரிய தீர்வுகள் இன்றி மோசமான நிலைக்குச் சென்றாலும், பாதுகாப்புக்குப் பயமுறுத்தல்கள் ஏற்பட்டாலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உரியமுறையில் பேணமுடியாத நிலை ஏற்படலாம். இந்த நிலைப்பாடு யுத்தத்திற்கான நிலையை உருவாக்கினாலும், படையினர் உடனடியாக யுத்த நடவடிக்கையில் ஈடுபடமாட்டார்கள்.

கிண்ணியாவில் விடுதலைப் புலிகள் புதிதாக முகாம் அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டாலும், அரசாங்கம் சரியான ஒரு நிலையில் அந்தப் பிரச்சினைகளை அணுகி வருவதாக ஒஸ்ரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார். (01)

# புலிக்கொடி...

இதனைத் தொடர்ந்து அங்கு வந்த படையினர் புலிக்கொடியேற்றப்பட்டதற்கான காரணத்தைக் கேட்டபோது, செயலமர்வில் இருந்த ஆசிரியர்கள், இது ஒரு கல்விசார் நடவடிக்கை எனவும், கல்வித் திணைக்கள அனுமதியுடன் இந்த நிகழ்வு நடைபெறுவதாகவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கிருந்து சென்ற இராணுவத்தினர், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டனர். செயலமர்வு நடைபெற்ற வேம்படி மகளிர் கல்லூரிக்கு வந்த கண்கீாணிப்புக் குழுவினர், புலிக்கொடி விவகாரம் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதற்கு, இது திணைக்களத்தின் அனுமதியுடன் நடைபெற்ற நிகழ்வு என ஆசிரியர்கள் தெரிவித்தபோது, இராணுவத்தினர் செய்த முறைப்பாட்டையடுத்தே தாம் இங்கு வந்ததாகக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இதையடுத்து இந்த விவகாரம் தொடர்பாக கல்வித் திணைக்களத்தினரிடம் கண்காணிப்புக்குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இலங்கையில்...

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் மீது தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறித்து செய்தியாளர் ஒருவர் கேட்டபோது- அது அரசியல் இலாபம் கருதிய செயல் அல்ல. எமது நாட்டின் சட்ட விதிமுறைகளுக்கு அமையவே அந்த இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது. இதுபோன்று பல அமைப்புக்கள் எமது நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் - அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சர்வதேச தமிழீழ மாணவ பேரவையினர் என பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்துவெளியிட்ட முன்னாள் மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் -

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் தமிழ் மக்களாகிய எமக்காகவே போரிடுகின்றார்கள். எமது விடிவுக்காகப் போராடும் அவர்களை பயங்கரவாதிகள் எனக்கூற முடியாது. இன்று தமிழ்மக்கள் அனைவரும் அவர்களது தலைமை ஏற்றுள்ளார்கள். பிரிட்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தங்கியுள்ளார். எனவே - எதிர்காலத்தில் புலிகள் மீதான தடை நீக்கம் பற்றி பிரிட்டன் ஆராய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இக்குழுவினர் நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ்.செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

பின்னர் - யாழ்.செயலகத்திலிருந்து புறப்பட்டு - குருநகர், சாவகச்சேரி போன்ற பிரதேசங்களைப் பார்வையிட்டனர்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள், இராணுவக் கெடுபிடிகள் போன்ற விடயங்கள் குறித்து பொதுமக்களின் பிரதிநிதிகளால் இவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வலி.வடக்கு பிரதேச மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பாக, பிரதேச செயலர் குணராசா எடுத்துரைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மைக்கல் அக்ரம் குழுவினரைச் சந்தித்த பொதுமக்கள் - கல்வி, சுகாதாரம், போன்ற பிரச்சினைகள் பற்றி அவரிடம் எடுத்துக் கூறினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் எனவும், இடைக்கால நிர்வாகத்தை அவர்களிடம் வழங்குவதற்கு பிரிட்டன் ஆவனசெய்யவேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

மாலை யில் விமானநிலையம் திரும்பிய இந்தக் குழுவினர், அங்கு படையதிகாரிகளோடு கலந்துரையாடலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (09)

நாற்சதுர சுவிசேஷ சபையின்
பொது ஆராதனை
எதிர்வரும் 07-09-2003 ஞாயிற்றுக்கிழமை யாழ்/மாவட்டத்திற்கான பொதுஆராதனை இல.673, பருத்தித்துறைவீதி, (முத்திரைச் சந்தி)யில் உள்ள எமது சபையில் காலை 8.30 மணிக்கு நடைபெறும். தேவசெய்தியளிப்பவர் - வண.கலாநிதி. லெஸ்லி கீகல் அவர்கள் எமது சபையின் அனைத்து விசுவாசிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(477) நிர்வாகம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
எமது பிரதான நிறுவனத்திலும் சாவகச்சேரியிலுள்ள கிளை நிறுவனத்திலும் பின்வரும் கற்கைநெறிகள் 12-09-2003லிருந்து ஆரம்பமாகவுள்ளன. எனவே மாணவர்கள் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
Dip. in MS Office
Dip. in Hardware Technology
Dip.in Desktop Publishing
Internet & e-mail
மேலதிக விசாரணைகளிற்கு
Director
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Jaffna. T.P: 2222674

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1544 திகதி: 05.09.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| M | 8 | 3 | 9 | 9 | 3 | 7 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.